தென்மொழி

கனித்தமிழ்

பாரதிதாசன் சிறப்பிதழ்

75 காசு

17 JUN 1968

நமக்குவந்த மடல்கள்.

(ஆசிரியர் குறிப்பு:சுருக்கம், செப்பம், உண்மை, தகுதி—வாய்ந்த கருத்து மடல்களே இங்கு வெளியிடப் பெறுகின்றன. உளத்தைத் கவரும் கருத்துத் தெறிப்புகள் முதலிடம் பெறுகின்றன. வெற்றுப் பாராட்டுகளால் என் உடலின் ஒரு சிறு அணுவும் மகிழ்வதில்லை. எனக்கே மகிழ்வளியாத அவை பிறர்க்கோ வெறுப்பை மூட்டுகின்றன. குறை நிறைகளை ஆயக் கற்றுக் கொள்ளுங்கள். அறிஞர்களையும் தான்தோன்றிகளாக மாற்றும் போலிப் புகழ்ச்சியுரைகளை அறவே கை விடுங்கள்.

—பெருஞ்சித்திரன்.

0 இம்மாத (ஏப்ரல் '68) இதழ் கண்டேன். ஆசிரியவுரையை உணர்ச்சி பொங்க எழுதியுள்ளீர்கள். தமிழனே தமிழனின் தலையான பகைவன்! அரசியல் காரர்களோ தறுதலைகளாக மாறித் தமிழ்ப் பண்பாட்டைச் சிதைத்துவருகின்றனர். மொழியின்பெயரால்—தமிழ்ப் பண்பின் பெயரால் தமிழர் குமுகாயத்தைப் பாழ்படுத்தும் கொடியவர்களே இங்குப் பெருகியுள்ளனர். எல்லாரும் தந்நலப் பேய்களாகவும் மாறியுள்ளனர். தங்களின் உள்ளத்திற்கு நான் மதிப்பளித்துத் தலை வணங்குகிறேன். —வீ. இரா. சந்திரன், அயன்புரம் சென்னை—23.

0 'தென்மொழி' தொடர்ந்து வராமல் நின்றுவிடப் போகின்றதோ என்று நெஞ்சு துன்பத்தில் துடித்துக் கொண்டிருக்கையில் கண்டேன்; களிப்பு கொண்டேன். கடந்த (மீனம்) இதழில் மூன்றும் அட்டைப்பக்கத்தில் திரு. மணிவேலன் அவர்கள் விடுத்திருந்த குறிக்கோளை ஏற்று நடத்த நாங்களும் அணியமாகக் காத்திருக்கின்றோம்.

மாவட்டம் மட்டுமன்று; இம்மாநிலத்தில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு மறத்தமிழரும் "தென்மொழி"யின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் ஒரு சிறுபங்கு தந்தால் போதும்; 'தென்மொழி'யின் வலிமைக்கு நிகர் 'தென்மொழி'யே என்ற நிலையை நிலைநாட்டி விடலாம். திரு. மணிவேலன் அவர்கள் குறிப்பிட்டிருந்தபடி 'தென்மொழி' வளர்ச்சி மாநாட்டை விரைவில் கூட்டினால், தனித்தமிழ் உணர்வுடன் இருக்கும் நாங்கள் துணைநிற்க அணியமாக உள்ளோம். தங்கள் திருப்பணி தளராது இருக்க எங்கள் துணை என்றும் உண்டு என்று உள்ள உறுதியோடு கூறிக்கொள்ளுகிறோம்.

—சி. பூ. மணி, பெங்களூர்-21.

0 உங்கள் அட்டைப் பாடல்கள் மரத்தமிழனையும் மறத்தமிழனுக்க வல்லது. குறிப்பாக மீனம், 1999 இதழ் முகப்பில் வந்த பாடல் மிகச்சிறப்பாக விருந்தது. நூறுசிரியம் வணக்கத்திற்குரியது. ஆசிரியவுரை பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டியது. ஆரியர்களின் கயமைக்கு ஓர் அறைகூவல். இச் சிறப்புப் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட 'தென்மொழி' அண்மைக் காலமாக மிகக் காலந்தாழ்ந்து வருதல் கண்டு 'தென்மொழி' நிறுத்தப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகின்றேன். எக்காரணம் பற்றியும் 'தென்மொழி' நிறுத்தப்படக்கூடாது என்று அன்புக் கட்டளையிடுகின்றேன்.

"தென்மொழி" பரவி வருகின்றது. அதைப் படிப்போர் தொகை பெருகிக்கொண்டே வருகின்றது. ஆரியர்களின் கரவைப் புரிந்து கொண்ட தமிழர்கள் ஏராளம். அதை முறியடிக்கும் வகையில் தமிழர் செயல்பட சிறிது காலமாகலாம். அதுவே தென்மொழியின்

(தொடர்ச்சி 3ஆம் அட்டைப்பக்கம்)



தென்மொழி

“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-3

மேழம் (சித்திரை) தி. பி. ௧௯௯௯ (1968-மே)
பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்,
தென்மொழி மின் அச்சகம், கடலூர்!.-

‘எழுத்து’ப் படைப்பாளிகள்!



‘சென்னையில் விலை போகாதது ஒன்றுமில்லை’ என்பார்கள், குப்பைகூளங்கள், பிய்ந்த முறங்கள், பழைய விளக்குமாறுகள் முதலிய சில்லறைப் பண்டங்கள் முதல், போலி வைரங்கள் வரை சென்னைக் கடைத்தெருவில் கிடைக்காத பொருள்கள் ஒன்றுமே இல்லை. பட்டிக்காட்டுக் குப்பம்மாள் ‘பட்டணம்’ போனவுடன் பகட்டாக உடை உடுத்தி, திருவாட்டி ‘பம்மா’ என்ற பெயருடன் தெருச் சுவரொட்டி முதல் திரைப்படம் வரை ‘உடல் பொருள் ஆவி’ அனைத்தையும் விற்றுப் பிழைப்பதற்கும் மின்னுவதற்கும் சென்னையில் வாய்ப்புண்டு. சென்னை போனவுடன் ‘செல்லப்பன்’ ‘செல்லப்பா’ ஆவார் அய்யாக்கண்ணு ‘அய்க்கண்’ ஆவார். திருவிழந்த தெய்வசிகாமணி திருவாளர் ‘தெசிணி’ ஆவார். இப்படி

சென்னை என்னும் திருநகரம் வந்தவர்க்கெல்லாம் வாய்க்கரிசி போட்டு வாழவைக்கும் சிறந்ததொரு நகரமாக விளங்கி வருகின்றது. இலக்கி யத் துறையிலும் சென்னை முதல்தரமான இடத்தைப் பெறுகின்றது. அமெரிக்கா, பிரான்சு முதலிய நாகரிக நகரங்களின் கழிவுப் பொருள் களிலிருந்து கிளர்ந்தெழுகின்ற 'இரவு' இலக்கியங்கள் கூட சென் னைக்கு வந்தவுடன் ஒரே இரவில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சாகிப் பளபளக்கும் இறவா இலக்கியங்களாக உலா வருவதை நாம் சென்னை யில் அன்றாடம் பார்க்கலாம். கலை வளர்ச்சியிலோ சென்னை அடைந்து வரும் மாற்றத்திற்கு அளவே இல்லை. நாளொரு பெண்ணும் பொழு தொருவண்ணமுமாக சென்னையில் அச்சேறி வெளிவராத அட்டைப் பட நூல்களே இல்லை என்று சொல்லலாம். உள்ளே இருக்கும் சரக்கு எத்தகையதானாலும் நூலைத் தொட்டவுடன் கைகள் குளிரக் குளிர வழவழப்பத் தாளிலும் கமகமக்கும் வண்ண மையிலும் அச்சிடப் பெற்று, அறிவைப்பிடித்து மனத்தைத் திணர அடிக்கும் அழகிய (ர்) அட்டைப் படங்களில் சொக்கிப்போய், பணத்தைப் பறிகொடுத்து நூல்களை வாங்கித் தம் சட்டைப் பைகளில் திணித்துக் கொண்டு திரி வதே இளைஞர் நாகரிகம் என்பது சென்னையின் இலக்கிய இலக்கணம்!

இலக்கியமே இப்படி என்றால் அங்குள்ள அறிவு விளைச்சலுக்குக் குறைச்சலே இல்லை. பதினாறுமுழப் புடவை பத்து முழமாகிப் பற்றாத முழமாகிப் போவதும், இளைஞர்களின் இடுப்பு வேட்டி போய், முழுக் கால் சட்டையாகிப் பின் அரைக் *கால்சட்டையாகி, அதுவும் போய் அரைக்கால் (!) சட்டையாகி இறுதியில் அரை (இடுப்பு)க் கால் சட் டையாக இழுத்துப் பறித்துக்கொண்டு இரண்டு பருத்த தொடைகளும் எடுப்பாகத் தெரியும்படி விளங்கித் தோன்றுவதும் நாகரிக வளர்ச் சியை மட்டுமன்றி அறிவு வளர்ச்சியையும் காட்டுகின்ற ஓர் அடையா ளமாகவே விளங்கி வருவதை என்னவென்று சொல்வோம்? சுருக்கமா கச் சொன்னால் பொருள்களை முழுவதுமாகப் பயன்படுத்துவோர் சென்னை இலக்கணப்படி குறைவான அறிவுள்ளவர்களே! எந்தப் பொருளையும் அரைப்பகுதியை மட்டும் பயன்படுத்துபவர்களே அங் குச் சிறந்த அறிவாளிகள்! நாகரிகமுடையவர்கள்; தேநீரா, அரைக் குவளை குடிப்பதுதான் நாகரிகம்! பாதித் தேநீர் குவளையிலேயேவிட்டு வைக்கவேண்டும். விடுதிச் சோறா? அதையும் பாதிதான் சாப்பிட வேண்டும். மீதியை அப்படியே இலையில் போட்டு மூடவேண்டும். அப் படி மூடாதவனை மூடன் என்று சென்னையன் சொல்வான். உடைகளா

பாதிதான் மேனியில் புரளவேண்டும். பாதி தரையில் புரளவேண்டும். இல்லாவிடில் கையில் தூக்கித்திரியவேண்டும். கால்சட்டை, மேல் சட்டை எல்லாம் பாதி பாதிதான். பெண்கள் சட்டைப் போடுவதனுல் பாதி முதுகுதான் மூடப்பட வேண்டும். முன்புறமும் பாதி 'அழகு' காட்டியாக வேண்டும். தலைப்பின்னலா பாதிதான் பின்னவேண்டும். அதையும் பின்னிக்கொள்ள சோம்பல்படும் பெண்கள் முடியையே பாதியாக வெட்டிக்கொள்ளலாம்! ஆனுல் பாதிதலைதான் வாரிக்கொள்ள வேண்டும். மீதி காதுகளை மூடும்படியோ, கன்னத்தை மூடும்படியோ அலையத் தொங்கவிட வேண்டும் காலில்போடும் செருப்பையும் பாதிக் காலால்தான் போட்டுக் கொள்ளலாம்; குதிகால் தரையில்தான் ஊன்ற வேண்டும். செருப்பின் மேல்தோலும் பாதிதான். பார்வைகூட பாதி தான். முழுப்பார்வை பார்ப்பவன் அங்கு முழுஆள்; அஃதாவது முட்டாள்! புகைபிடித்தாலும் பாதிவரைதான் உறிஞ்ச வேண்டும். மீதிப் பாதியை பாதையில் அஃதாவது பாதிச்சாலையில் விழும்படி (ஓரத்தில் விழக்கூடாது) விட்டெறிய வேண்டும். திரைப்படம் பார்க்கப் போனு லும் பாதிப்படத்திற்குமேல் எழுந்து வந்துவிட வேண்டும். வாழ்க் கையா அதுவும் பாதிவாழ்க்கைதான். திருமணம் செய்பவர்கள் கூட பாதிக்காலந்தான் அஃதாவது ஒரு பத்தோ பதினைந்து ஆண்டோ தான் மனைவியோடு வாழலாம். அதன்பின் அவளை மணவிலக்குச் செய்துவிட வேண்டும். இல்லையெனில் அவன் பட்டிக்காடுதான். இப் படி இந்தப்பாதி அல்லது அரைக்கிறுக்குத் தனத்திற்கே இப்பொழுது சென்னையில் நாகரிகம் என்று பெயர். இதை அங்கு இங்கு எனுதபடி எங்கும் எதிலும் ஊன்றிப் பார்க்கலாம். கல்வியாகட்டும், கலையாகட் டும் வாழ்க்கையாகட்டும் இந்த அரை, குறை வாழ்வே முழுநாகரிகம் என்ருகிவரும் இடம் சென்னை. மொத்தத்தில் முழுமை என்ருலே நாக ரிகமற்றது என்று பொருள் சென்னையில்! இந்த நகரத்திற்குப் படிப் பின் பொருட்டு வரும் இளைஞர்களும் இந்த 'அரை' நாகரிகத்தைத் தங்கள் தங்கள் சிற்றூர்களில் போய்ப் பரப்புதலே தங்கள் வாழ்க்கைத் தொண்டாகக் கருதி வருகின்ருர்கள். எனவே இந்த நாகரிகம் (!) இக் கால் தமிழ்நாடு முழுவதுமே பரவி வருகின்றது என்பதைப் 'பாதி' மனத்தோடாகிலும் ஒப்புக்கொண்டே ஆகல்வேண்டும்.

இப்படிப்பட்ட ஆள்பாதி அறிவு பாதியாக இருக்கும் சென்னை யில்தான் தமிழகத்தின் இலக்கியப் படைப்பாளிகள் எல்லாரும், எழுத் தாளர்கள் எல்லாரும் 'குடி' கொண்டுள்ளார்கள். இவர்களுக்குள்ளேயே எவன் பாதியிலும் பாதியாக இருக்கின்ருனே அவனே 'புரட்சி' எழுத் தாளன்; பெரிய இலக்கியப் படைப்பாளி! அவர்கள் கையால் எழுதுவ தெல்லாம் எழுத்து! வாயால் எடுப்பதெல்லாம் இலக்கியம்! அந்த இலக் கிய 'அரைஞன்' வைத்ததுதான் வரிசை; இட்டதுதான் இலக்கணம்!

அந்தப் படைப்பாளி அரைஞர்கள் எழுதுகின்ற எழுத்துகளில் வீசாத நாற்றமே இல்லை கூவம் ஆற்றின் குடலைப்புரட்டும் நாற்றம்

முதல், குமரிப்பெண்களின் குண்டி நாற்றம் வரை எல்லாவற்றையுமே எழுத்தில் 'வடித்'தெடுப்பார்கள்! சென்னைத் தெருமேடைகளில் இரவில் என்னென்ன வேடிக்கை நடக்கும்?! திரைமேடைகளில் என்னென்ன 'வாடிக்கை' படுக்கும்? ! மூர் அங்காடிக்குள் வழுக்கும் பழத்தோல்கள் எவை எவை?! பொதுக் கழிவகங்களில் கழிக்கின்ற மலங்களில் உள்ள உணவுத் துணுக்குகள் என்னென்ன-இப்படி எல்லா இண்டு இணுக்குகளும் இவர்கள் கதைகளில் வரும். ஒருவன் மனைவியை இன்னொருவன் எட்படி 'அழகு' ஆராய்ச்சி செய்வது? எவளைக் கொண்டுவந்து எப்படி எப்படி நிறுத்தினால் மேலட்டைப் படத்திற்கான ஓவியம் கிடைக்கும், என்பவற்றில் அவர்களின் மூளை வேலைசெய்துகொண்டே இருக்கும். இந்தப் படைப்பாளி அரைஞர்களை வைத்து எதை எதை எழுதி வாங்கி எந்த எந்தப் படத்துடன் அச்சிட்டு இதழ்களை எவ்வெவ்வூரில் எவ்வெவ்வளவு அனுப்பி விற்பது என்பதைப்பற்றி டெல்லாம் அங்குள்ள குமுதம், ஆனந்தவிகடன், தினத்தந்தி, இராணி அரைஞர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில் அந்த அரைஞர்களின் கண்களுக்கு இந்த அரையில் அரையாகத் திரியும் அம்மணர்களே புரட்சி அரைஞர்கள்! படைப்பாளிகள்! எழுத்தாளர்கள்! இவர்களுக்கென்று ஒரு மக்கள் கூட்டம்! மாணவர் குப்பல்! சுவைஞப்பிள்ளைகள்!

பெரும்பாலும் இத்தகைய புரட்சி எழுத்தாளர் கூட்டங்களில் பிராமணச் சிண்டுகளும் (இப்பொழுது அரை மயிர்த்தலையர்கள்) பூணூல்களும் (இதை விட்ட ஒரு பார்ப்பானை இதுவரை நான் கண்டதே இல்லை), அவற்றை நீவிக் கொடுத்தும் உருவிக் கொடுத்தும் பிழைக்கும், தாய்தப்பிய தறுதலைத் தமிழப் பிறப்புகளும், பாய்மாறிப் பிறந்த பண்டைத் தமிழ்மேனிகளும் தாம் மிகுதி! இவர்கள் அத்தனைப் பேர்களுக்கும் வாழ்வளிப்பது சென்னை! இவர்களுக்கு முழுமை என்றாலும் பிடிக்காது! தூய்மை என்றாலும் பிடிக்காது! தனிமை என்றாலும் விளங்காது! பிறப்பிலேயே இம்மூன்றும் கெட்டவர்கள் வாழ்வில்மட்டும் இவற்றைப் பிடித்துக்கொண்டா இருப்பார்கள்?

இப்படிப்பட்ட 'சிண்டு'க் கும்பல் நடத்துகிறது ஓர் இதழ்! அதன் பெயர் 'எழுத்து'! சென்னைத் திருவல்லிக்கேணியிலிருந்து வருகிறது இவ்வெழுத்து! இதில் எழுதப் படுவதுதான் எழுத்தாம்! படைக்கப்படுவதுதான் படைபபாம்! மொழியப்படுவதுதான் மொழியாம்! இவற்றைப் படைப்பவர்கள்தாம் படைப்பாளிகளாம். இவர்கள் செய்வதுதான் புரட்சியாம்!

(என் கைகளில் உள்ள தூவலுக்கு அடிக்கடி மை நிரப்பவேண்டும்! நான் எழுதுவதை அச்சேற்றி வெளியிட ஒருமாதம் பொறுத்திருக்கவேண்டும்! நான் நினைப்பதெல்லாம் உடனுக்குடன் அச்சேறி வெளியேறி அவர்களின் மண்டைகளைத் தாக்குவதற்கு வாய்ப்பேற்படு

மாஞல் இவர்களைப் பற்றி இப்படி உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்க வும் மாட்டேன்; இதை நீங்கள் படித்துக்கொண்டிருக்கவும் வேண்டா. நேருக்கு நேராகக் கருத்துப் பறிமாற்றம் ஏற்படுமாஞல், சென்னைக் கிறுக்கர்களின் அறிவாளித் தனங்களை இவர்களுக்கு மிகவும் இசைவான 'அரை' நொடியிலேயே விளக்கிக் காட்டுவேன்!...! என் இறைவனே! அவ்வாய்ப்புக்கு எனக்கொரு வழிவகுத்துக்கொடு! இந்த நாட்டை நன்னிலைப் படுத்தும் இவ்வுள்ளத்திற்கு இடம் ஏற்படுத்தித் தா! மக்கள் உய்ந்து போகட்டும்!)

இவர்கள் எழுதுகின்ற எழுத்தைப் பாருங்கள். "இதுகளுக்கு" மூணு நாலஞ்சு, எல்லாத்தையும், ரொம்ப, சிலதில், முக்கிமுனங்கி, எக்காளச் செண்டிப்பு, பின்ருல் (*பின்ஞல் என்பது*), எழுதுவதுக்காக, இன்றய—" எப்படி? இப்படி எழுதுவதுதான் தமிழாம்! இதுதான் *புரட்சியாம்; இதுதான் படைப்பாளியின் மொழியாம்.* இந்தப் படைப் *பாளி சொல்வதைக் கேளுங்கள்:* "சங்கத் தமிழ் என்ன, பாரதியின் தமிழ்கூட இன்றைய நாவல் சிறுகதை படைப்பாளிக்கு போதாது. படைப்பாளிக்கு உரைநடை (புரோஸ்) மட்டும் போதாது. நடை (ஸ்டைல்) வேண்டும். இந்த ஸ்டைல் என்பது எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், வாக்கியம் இல்லை. அனுபவத்தை, உணர்வை, அழகை, அறிவை, கற்பனையைத்தன் குரலாக ஒலிக்கச் செய்கிற வெளியீட்டுக்கான ஒரு சாதனம். இந்த சாதனம் அவனவன் கையில் மேலே சொன்ன அம்சங்களுக்குத் தக்கபடி வளைந்து கொடுத்து வித வித சொல் சேர்க்கைகளால் பலவித வாக்கிய வார்ப்புகளாகும். அது தான் நடை ரகங்கள் என்பது. இது தமிழ்ப்பேராசிரியர்களுக்கு இன் னும் தெரியவில்லை போலிருக்கிறது. படைப்பாளிகள்தான் இனி அவர் களுக்குத் தெரியச் செய்யவேண்டும். பேராசிரியர்களுக்கு ஒரே வித வாக்கிய அமைப்பு உரைநடைதான் தெரியும். அதை வைத்துக் கொண்டுதான் எல்லாத்தையும் எடைபோடுவார்கள்... இந்த தூய தமிழ், நல்ல தமிழ், மாற்று மொழிச்சொல் என்ற பேராசிரிய புலவர் தமிழாசிரியர்களின் மூடநம்பிக்கை குரலை லட்சியம் செய்யாமல், ஏன் உதாசீனம் செய்து தங்கள் கவனத்தை, தமிழ் இலக்கியமும் மொழி யும் வளர தங்கள் பங்கைச் செலுத்துவதில் மனம் முனையவேண்டும். படைப்பாளிகள் .. ... விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிமுறை வழியே பண்டைய இலக்கியங்களின காலம் பற்றி முடிவுகள் செய்துள்ளார் வையாபுரி .."

எப்படி இந்தச் 'செல்லப்பா'க்களின் (இவர்தான் 'எழுத்து' ஆசிரியர்) புரட்சியான, 'விஞ்ஞானபூர்வ'மான கருத்து? படைப் பாளன், எழுத்தாளன் என்று கூறிக்கொண்டு எதை வேண்டுமா ஞலும் எழுதலாமாம். அதனை 'விஞ்ஞான பூர்வமானது' என்றும் சொல்லிக் கொள்ளலாமாம். 'விஞ்ஞானம்' (அறிவியல்) என்பது

இப்படித் தலைகொழுத்துக் கண்டபடி கண்டதிசையில் கண்மூடித் தனமாகக் கதைத்துத் திரிவது என்று இந்தக் கழுதைகளின் நினைப்புப் போலும்! 'விஞ்ஞானபூர்வ' மானதாகக் குடும்பம் இயங்க வேண்டும் என்பதற்காகத் தமக்கையைக் கையைப் பிடித்து இழுப்பது தாயை ஓவியப் போலிகை (MODEL) யாக நிறுத்தி உடலின் வளைவு சுழிவுகளை வரைவது முதலியவற்றைச் செய்வதுதானே! அல்லது செல்லப்பன் கூட்டம் தம் மனைவி மக்களை அவ்வாறு பிறர் ஆராய்ச்சிக்குப் பயன்படும்படி ஈடுபடுத்துவதுதானே! 'விஞ்ஞானபூர்வம்' என்றால் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்று பொருளில்லை. எழுத்துத் துறையும் அதனை அடிப்படையாகக் கொண்ட இலக்கியத் துறையும் ஒன்றுதான், எழுத்து வெறும் எழுத்து மட்டுமன்று; அதன் ஒளியமைப்புகளில் வாழ்க்கையின் ஒலியமைப்புகளே பொதிந்து கிடக்கின்றன. எழுத்தின் ஒளிமாறினால் வாழ்வின் ஒலிமாறும். எழுத்தையும் வாழ்வையும் இணைப்பது மொழி. எழுத்திலிருந்து வாழ்க்கைக்கு மாந்தரை ஏற்றிவிடும் ஏணியே மொழி! ஏணிக்கோணல் வாழ்க்கைக்கோணலாகப் போய்விடும் என்பது ஒருவேளை செல்லப்பாவிற்கும் அவரைச் சார்ந்த பிராமணக் குடும்பங்களுக்கும் வழக்கமாகவோ, மரபாகவோ இருக்கலாம். தமிழினத்தில் அப்படிப்பட்ட தமிழர்களும் இல்லை; தமிழச்சிகளும் இல்லை.

செல்லப்பாவின் குடும்பப் படைப்பாளி ஒருவன் எழுதிய புரட்சிப் பாட்டைப் பாருங்கள்.

பல சக்ர வ்யூகத்துள்
கடும் புகையின் கணைக்கூட்டுள்
கடலிரைச்சல் கோஷ நடுவில்
ட்ரெஸ்ஸர் கனைக்க
கட்டர் உறும
மிக்ஸர் அலற
க்ரஷ்ஷர் கர்ஜிக்க
எஃகுக் கால் ராக்ஷஸர்கள்
கண் சிமிட்டி எக்களித்து
நெருப்பைக் கொப்புளித்து
அபிமன்யுக்கள் ஜடராக்னிக்கு
ஜீவியத்தை ஹவிஸர்க்சி
உதரமேத யாகம் செய்து
உயிர் போற்ற உடலழிக்கும் போது...!

எப்படி? குடுகுடுப்பைக்காரன் துணியைப்போல் பல கந்தல் உணர்வுகளையும் அவற்றிற்கான சொற்களையும் ஒட்டவைத்து

வாய்க்கு வந்தபடி கொட்டிக்கிளறும் இந்த நடையில்தான் தமிழ் உயிர்கொண்டு திகழ்கிறதாம்! எவன் வீட்டில் இழவு விழுந்தால் என்ன? தனக்கொரு தருப்பைப் புல்தான் செலவு? என்பது ஆரியப் பார்ப்பனர்களுக்கே ஒரு கொள்கை! அதனுல் தமிழ் எக்கேடு கெட்டால் என்ன? பிறர் படித்தால் என்ன? படிக்காவிட்டால் என்ன? புரிந்தால் என்ன? புரியாவிட்டால் என்ன? தன்வயிற்றுப் பிள்ளை வெளிவந்தால்சரி! புல்லானுல் என்ன? குப்பைத்தொட்டி ஆனுல் என்ன? அவன் சமற்கிருதத்தில் இப்படிக் கைவைப்பானு? ஆங்கிலத்தில் இப்படிக் கைவைப்பானு? வைத்தால் இவன் மூக்கு முன்னுல் நீட்டிக்கொண்டிருக்குமா?

தமிழ் என்பது வெறும் தாய்மொழி என்றுமட்டுந்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனுல் இப்படிப் பெற்றவள் தெரியா ஏதிலி (அனுதை)களுக்கும் செவிலியாக இருப்பதைக் கண்டு ஒருவாறு அமைதியும் கொள்கின்றேன். ஆனுல் செவிலியையே பெண்டாள நினைக்கும் செல்லப்பா, செயகாந்தன், நா. பார்த்தசாரதி முதலிய பழங்கதை (புராண)த் தலைவர்களாக இவர்கள் இருக்கின்ருர்கள் என று அறிந்தும் தமிழ்த்தாய்க்கு நல்ல பிள்ளையாக இருக்க நான் விரும்பவில்லை. இப்படிப்பட்ட புறம்போக்குகள் இனிக் கீழ்வருமாறும் எழுதலாம்.

" சொள சொள டிரிங்டிரிங் புர்புர் கடபுடா
காகா, கீகீ கஸ்புஸ் ஹைஹை
பாம்பாம் டேடே ஹச்ஹச் ந்தா ந்தா
ஐஸ்ஐஸ் பயோம் பயோம் கடகடா சர்புர் "

எப்படி? புரிகிறதா? ஒரு பெரிய நகரக்காட்சியே இதில் 'விஞ்ஞான பூர்வ'மாக அடக்கி வைக்கப் பட்டுள்ளதைப் படைப்பாளியின் மூளை கொண்டு புரட்சி மனம்கொண்டு பார்த்தால்தான் புரியும். இப்பாட்டின் பொருளை ஒரு 'விஞ்ஞான'ப் படைப்பாளியைக் கேட்டால் அவன் இப்படிப் பொருள் சொல்வான். சென்னைப் பெருஞ்சாலை யொன்றில் நின்றுகொண்டு காணும் காட்சி அப்படியே காட்டப்பட்டுள்ளது இப்பாட்டில்.

"சொள சொளவென்பது அருகில் உள்ள குழாயில் வரும் தண்ணீர். டிரிங்டிரிங் என்பதுமிதிவண்டி குறுக்கிடுவதை புர்புர் என்பது சரக்குந்து (லாரி). கடபுடா என்பது கட்டைவண்டி வருவது. மேலே ஒரு காகம் கா கா என்று கத்திக்கொண்டு செல்கிறது; கிளி ஒன்று கீ கீ என்று கத்திக்கொண்டு பறக்கிறது; கட்டைவண்டி தள்ளுபவர்கள் கஸ்புஸ் என்று முக்கி முனகுகிருர்கள்; குதிரைவண்டி ஒன்று ஹைஹை என்று குறுக்கே போகிறது; உந்து பாம் பாம் என்று ஒலி எழுப்புகிறது. ஒரு

பையன் இன்னொருவனை 'டேய் டேய்' என்று கூப்பிடுகின்றான்; ஒருவன் ஹச்ஹச் என்று தும்புகின்றான்; ஒருத்தி தன் கணவனை ந்தா ந்தா என்று கூப்பிடுகிறாள்; ஒருவன் ஐஸ் விற்றுப் போகிறான்; ஒருத்தி பயம் பயம் என்று பழம் விற்கிறாள் மின்சார வண்டி ஒன்று கடபுடா என்று போகிறது சர் புர் என்று மகிழுந்துகள் பறந்த வண்ணமிருக்கின்றன."

எப்படி? இத்தனையும் இதில் இருக்கின்றனவா? இல்லையா? இதுதான் செல்லப்பா கூறும் படைப்பாளிகளின் விஞ்ஞானத் தமிழ்! அட! தமிழா! நீ இன்னமுமா உயிரோடு உலா வருகின்றாய்! உனக்குத் தமிழ் ஒரு கேடா? வரலாறு ஒரு கேடா? மானம் ஒரு கேடா? நீ தூங்கினாய்; பிறன் எழுந்தான்; நடந்தான்; ஆடினான்; பாடினான்! அடே மறவா! உன் மறத்தனம் எங்கே? உன் குருதிச் சூடு எங்கே? இருந்தால் நீ இருக்கின்ற மண்ணில் செல்லப்பன் கூட்டம் இப்படி உலா வருமா? அவன் எழுதுகிற எழுத்துக்கு அரசினர் நூலகங்களில்இடம் கிடைக்குமா? தமிழா' முதலில் இதை எனக்குத் தெளிவு படுத்து. நீ உண்மையான தமிழன்தானா?

—பெருஞ்சித்திரன்.

திருச்சி தமிழ்ப்புலவர் மாநாடு.

(ஓர் அறிக்கை)

அருந்தமிழன்பரீர்!

திருவள்ளுவராண்டு 1999, ஆடவைத்திங்கள் 16, 17-ஆம் பக்கல் (29, 30-6-68 காரி ஞாயிறு) களில் திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்ப்புலவர் மாநாட்டிற்கு வருகை தருவோர் அனைவரும் தங்குதற்கும் உண்டிக்கும் முன்னேற்பாடாக (ஐந்து வேளை உண்டி) உருபா ஐந்து முன்பணமாக அடியிற் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அஞ்சற்பணவிடை மூலம் விடைத்திங்கள் 25-ஆம் பக்கலுக்குள் விடுத்து வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,

செ. முத்து அடிகள்,
அமைப்புச் செயலாளர்.
தமிழ்ப்புலவர் மாநாடு, கோட்டாத்தூர்.
வழி புத்தனாம்பட்டி. திருச்சி மாவட்டம்.

இலக்கியம்

நூற்சிரியம்.

துரை-மாணிக்கம்

பாட்டு கஉ.

எவர்கொல் துணையே! கவர்புற் றனையே!
குவடுபட நடந்த சுவடும் மாறாது;
வான்பட் டதிருங் குரலுந் தேயாது;
வல்லுயிர் செகுக்க மாற்றலர் வெரூஉம்
கொல்லயில் விழியின் இமையுங் குவியாது;
முன்னைப் பெருமையின் முங்குபே ருணர்வால்
அன்னைத் தமிழுக்கே அலங்கல் சார்த்தித்
தீச்சுடர் எழுத்தால் பாச்சுடர் கொளுத்தி,
ஓச்சிய தடங்கை வீச்சும் ஓயாது;
உயிருணர் வூரப் பொழிந்துயர் வாழ்க்கைப்
பயிர்செழிப் பூரப் பாடினை கொல்லோ!
இனியே
துவரிதழ்த் தாமரை கவர்துளி மாந்தி
உவப்புற முரலும் கருவண் டொப்ப
இயற்கை தூங்கும் புலவரும் இல்லர்!
மயற்கை அகற்றும் மறவரும் இல்லர்!
மருட்சி அகற்றிடு புரட்சியும் இல்லை!
இருள்துயில் கொண்ட தமிழகம் எழவே
அருள்மொழி நெஞ்சத் தறமும் மடிந்தது!
தயிர்கடை மத்தம் ஆகித் தமிழர்
உயிர்கடைந் தெடுக்கும் நின்பெரும் பிரிவால்
உள்ளமும் அறிவும் ஒய்ந்த
கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கே!

பாட்டு கஉ

பொழிப்பு:

குன்றம் பொடிந்து படும்படி பெருமிதத்தோடு நீ நடந்துசென்ற காலடிகளும் இன்னும் மறையவில்லை; வானில் தெறித்து அதிரும்படி முழங்கிய நின் குரலொலியும் இன்னும் தேய்ந்து போகவில்லை; வலிந்த உயிர் அழிந்து போகும்படி பகைவர் அஞ்சுகின்றதும் உடலைக் கொல்லுகின்றதும் வேல்போல் கூரியதுமான நின் விழியின் இமைகள் இன்னும் குவிந்து போகவில்லை; முன் நாளைய பெருமையுள் முழுகி எழுந்த பேருணர்வினால் தமிழன்னைக்குப் புகழ்மாலை சூட்டியும், தீயின் ஒளி நாக்குகள் போலும் எழுத்துகளினால் பாட்டில் சுடர்கொளுத்தியும், அரசோச்சி நின்ற நின் பெரிய கைகளின் வீச்சும் இன்னும் ஓய்ந்த பாடில்லை. உயிர்களின் உணர்வு மிகும்படி பாடல்களை மழையெனப் பொழிந்து உயரிய வாழ்க்கை என்னும் பயிர் செழித்துப் புடைநிரம்பும் படி நீ பாடியிருந்தனையே!

இனியே, சிவந்த இதழ்கள் நிறைந்த தாமரையின் தேன்துளிகளைக் கவர்ந்து அருந்திய உவப்பின் மேலீட்டால் முரலுதல் செய்யும் கரியவண்டைப்போல், இயற்கையூடு ஒன்றிப்படியும் புலவர் எனப்படுவோரும் இனி இலராக, மக்களின் அறிவுமயக்கம் அகற்றுகின்ற மறவர் எனப்படுவோரும் இனி இலராக; இருள்மண்டி உறக்கம் கொண்டிருந்த தமிழ்நிலம் விழித்து எழும்படி, அருள்மழை பொழியும் அறம் பூண்ட நெஞ்சும் மடிந்துற்றதாக. தயிரை அலப்பிக் கடைகின்ற மத்துப்போலும், தமிழரின் உயிரைக் கடைந்தெடுக்கின்ற நின்னுடைய பெரும் பிரிவினால் உள்ளமும் அறிவும் ஓய்தல் நின்ற கள்ளமற்ற உணர்வினர் கனிந்து நிற்போர் தமக்கு,

எவர் இனித் துணையாவரோ? இறப்பெனும் கள்வனால் கவர்ந்து கொள்ளப் பெற்றனையே!

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

பாவேந்தர் பாரதிதாசன் என்னும் கனகசுப்புரத்தினம் மறைந்த ஞான்றை உள்ளக் கவற்சி மீதூரப்பாடிய கையறுநிலைப் பாடல் இது

பாவேந்தரின் பெருமிதமான போக்கும், தமிழுக்கென ஓங்கிநின்ற குரலும், தமிழ்ப் பகைவர் அஞ்சிப் புறம்நடுங்கும் நோக்கும், பேரரசன் எனப் பெருமிதங்கொண்டு ஓச்சிய கைவீச்சும் அவர் வாழ்ந்த வாழ்க்கையின் பெரும் பயனும் இன்னும் தமிழர்களின் நெஞ்சங்களில் காட்சியாகி நிற்கும் நிலையினைக்காட்டி, அவர் பெரும் பிரிவால் தமிழர் இழந்த இழப்பையும், அவலத்தையும் தொகுத்துக் கூறியதாகும் இப் பாடல்.

எவர்கொல் துணையே... என்னும் முதலடியினை இறுதியடிக்கு முடிவாகக் கொள்க.

எவர் துணை: என்றமையால் இனித் துணை எவருமிலர் என்றபடி.

கவர்பு உற்றனை –கவர்ந்து கொள்ளப்பெற்றனை. பிறர் விரும்பும் ஒருவரை அவர் விருப்பத்திற்கு மாறாகப் பிரித்ததான், கவர்தல் எனக் கூறவேண்டுவதாயிற்று.

குவடுபட நடந்த சுவடு: குன்றம் பொடிந்து போமாறு நடந்த நடையான் அமைந்த சுவடு. நடைக்குப் பெருமிதங்காட்ட வேண்டிக் குன்றம் பொடியும் நடை எனலாயிற்று. ஒருவரின் வாழ்க்கைப் போக்கின் பெருமிதப் போக்கினை உணர்த்துவது ஒருவரின் நடையே ஆகலின் நடை முதற்கண் கூறப்பெற்றது. நடையெனினும் போக்கு எனினும் ஒன்றேயாகி, அவர் வாழ்ந்த பெருமிதமான வாழ்க்கைப் போக்கினைக் கூறிற்று இவ்வடி.

இனி, நடைக்கடுத்து, ஒருவரின் பெருமிதம் அவர் குரலான் வெளிப்படலால் அவர் குரலின் செம்மாப்புக் கூறவேண்டுவதாயிற்று.

வான்பட்டு அதிருங்குரல்: –வானின்கண் பட்டுத் தெறிக்கும் குரல். அதிர்தல் – ஒலித்தெறிக்குதல். ஒருபுடை நின்று எழுப்பிய அவர் குல் எண்டிசையும் பரந்து பட்டுச் சென்றது கூறப்பட்டது.

மெல்லுயிரைச் சிதைத்தல் எளிதாகலான் வல்லுயிரைச் செகுத்த விழி எனப் பெருமிதந்தோன்றக் கூறப்பெற்றது. உயிரை செகுத்தலும், மனத்தை வெருவித்தலும், உடலைக் கொல்லுதலும் செய்யும் அயில்விழி என்று கூறப்பெற்றது.

அயில் – வேல், உயிரை அயிலுதலால் வேல் அயில்எனப்பட்டது' அயிலுதல் – உண்ணுதல்.

அவர் நடந்த மிடுக்கான நடையின் சுவடு தோயாமையும், அதிர்ந்த குரலின் செம்மாப்பு இன்னும் அடங்காமையும், பகைவர் அஞ்சும்படி செய்து அவர் உயிர் செகுக்கும்படி நோக்கிய பெருமிதம் சான்றவிழி இன்னும் மூடாமையும், அவர் ஓச்சிய தடங்கைகளின் வீச்சு இன்னும் ஓயாமையும் இன்றும் நம்மிடையே இருப்பார் போன்றதோர் உணர்வை எழுப்புகின்றன என்க.

இமை குவிதல்: – விழி மூடுதல்.

அவரின் திறந்த விழிகளையே கண்டு அவரின் மூடிய விழிகளைக் கண்டிலோம் ஆகையால் அவர் பார்வையே இன்னும் நம் நெஞ்சில் உளதாகின்றது.

மூங்குதல்: முழுகுதல்.

அன்னைத்தமிழ்: பிறமொழிகளுக்கு அன்னையாகி நின்ற தமிழ்.

தீச்சுடர் எழுத்து: தீயின் ஒளி நாக்குகள் போன்று சூடு கொளுத்தும் எழுத்து.

பாச்சுடர் கொளுத்தி: பாவின் சுடரை மக்கள் நெஞ்சில் ஏற்றி.

ஓச்சுதல்: உயர அலைத்தல்.

உயிரிணர்வுஊரப் பொழிந்து: மாந்தரின் உள்ளுணர்வு மிகும்படி மழைபோற் பொழிந்து;

உயர்வாழ்க்கை...பாடினை: உயர்வு சான்ற மாந்த வாழ்க்கை என்னும் பயிர் செழிப்புற்று நிரம்பும்படி பாடினாய் கொல்.

கொல்—அசை. ஓ! இரக்கவுணர்வு தோற்ற வந்தது.

இனியே—நின் மறைவுக்குப் பின்னதாக இனி.

துவர் இதழ்—சிவந்த இதழ்.

தாமரை—தாமரை மலர். தாமம் – கதிரவன். அரை – தண்டு; மலர் – பூ. கதிரவன் கண்டு மலரும் தண்டுப்பூ என்னும் பொருளுடைய தூய தமிழ்ச்சொல். தாம

ரைப்பூ வென்ற முழுச்சொல் பின் தாமரை என்ற அளவிலேயே பூவைக் குறித்தது.

முரலுதல்—வண்டின் இமிழும் ஓசை.

இயற்கை தூங்கும் புலவர்—இயற்கையோடு பொருந்தி நிற்கும் புலவர்.

புலவர்—அறிவுடையவர். புலம்-அறிவு.

பாவலர்—பா எழுத வல்லவர்.

பாவலரினும் புலவர் சிறப்புடையர். பா எழுதல் ஒரு கலைப் பயிற்சி. ஓவியம், கற்றளி (சிற்பம்) போலும் பா எழுதுதலும் ஒரு கலையே. புலமை அப்படிப் பட்டதன்று. இயற்கை அறிவு மிகுந்தது; பொறிகளாலும், புலன்களாலும் உணரப்பெற்ற உணர்வும், அவை வழி மெய்யுணர்வும் மிகப் பெறுதல் புலமை. இனி, பா எழுதுவோனுக்குப் புலமை நிரம்பியிருத்தல் வேண்டும் என்பதும், அஞ்ஞான்றே அவன் எழுதும் பா செப்பமும், நுட்பமும், திட்பமும் பொருந்தி விளங்கும் என்பதும் பண்டைத் தமிழ் மரபு. இனி, புலமை பெற்றவர் எல்லாரும் பா வழியினுனே தங்கள் அறிவுக் கருத்தினைப் புலப்படுத்தினுர் ஆகலின் புலவோர் பாவலரும் ஆனுர் என்க.

மயற்கை—அறிவுமயக்கம் – அறியாமை.

மறவர்—துணிவு, ஆண்மை மிக்கவர்.

மருட்சி யகற்றிடு புரட்சி: மக்கள் மதி திகைந்த நிலையினை அகற்றிக் கீழ்மேலாகச் செய்யும்நிலை. தமிழும், தமிழரும் கீழ்மையுற்றிருந்த காலை அதனையும் அவரையும் மேன்மையுறுமாறு செய்த நிலை.

இருள்துயில்: இருள்போலும் மண்டிய துயில்.

அருள்பொழி நெஞ்சத்து அறம்: அருள் நோக்கான் பொழிவுற்ற நெஞ்சத்தின் அறக் கொள்கை.

தயிர்கடை......பிரிவு: தயிர் மத்தால் அலப்புறல் போல், தமிழர் பாவேந்தர் பிரிவால் அலப்புற்றனர் என்க. தயிர் அலப்புற வெண்ணெய் திரளுதல்போல், பாவேந்தர் பிரிவால் அலப்

புறும் தமிழர் நெஞ்சத்து விடுதலை திரளுதல் என்பதைக் குறிப்பால் உணர்த்தியபடி.

உள்ளமும் அறிவும் ஒய்ந்த கள்ளமில் உணர்வு: உள்ளத்தாலும் அறிவாலும் நிலைநின்று இயங்கும் கள்ளமற்ற நடுநிலையான உணர்வுடையோர்.

கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கு எவர் கொல் துணையே என்று கூட்டுக.

பாவேந்தர் தமிழரிடைப் பிறந்து மொழியாலும், இனத்தாலும் அவர் மறுமலர்ச்சியுறும்படி ஓர் உணர்வுப் புரட்சியைத் தோற்றுவித்து மறைந்த நிலையில், இனி அவலமுற்ற தமிழினத்திற்கு உற்றதுணை எவரோ எனக்கவன்று பாடியது புரட்சி தோன்றிய நிலையில் மறைவுறின் அது முடிவுறுதல் யாங்ஙனே? எவர் துணைக் கொண்டோ! என அரற்றியதுமாகும்.

இது பொதுவியல் என்திணையும் கையறு நிலை என் துறையுமாகும்.

தென்மொழி கட்டண உயர்வு அறிக்கை.

தென்மொழியின் தனியிதழ்விலையும், ஆண்டுக்கட்டணமும் இவ்விதழ் முதற்கொண்டு முறையே 75 காசாகவும், 9 உருபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. விலையுயர்த்தத்திற்கு முன் உறுப்பினராகச் சேர்ந்தவர்கள் எண்களையும் அவர்கள் புதிய கட்டணப்படி இவ்வாண்டுக்குச் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகைகளையும் கீழே குறிப்பிட்டுள்ளோம். நிலுவைத் தொகைகளை அன்பர்கள் உடனே அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். பணவிடைக் கிழிப்பத்தில் உறுப்பினர் எண்ணும் தொகை விளக்கமும் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

			உரு.	காசு.
உறுப்பினர் எண்	1653 முதல்	1708 வரை	0	— 25
,, ,,	1709 ,,	1716 ,,	0	— 50
,, ,,	1717 ,,	1743 ,,	0	— 75
,, ,,	1744 ,,	1777 ,,	1	— 00
,, ,,	1778 ,,	1818 ,,	1	— 25
,, ,,	1819 ,,	1857 ,,	1	— 50
,, ,,	1858 ,,	1924 ,,	1	— 75
,, ,,	1925 ,,	1946 ,,	2	— 00
,, ,,	1947 ,,	2033 ,,	2	— 25
,, ,,	2034 ,,	2105 ,,	2	— 50
,, ,,	2106க்கு மேல்		2	— 75

—அமைச்சர்

தமிழோடு தமிழானாய்.

-இளஞ்சித்திரன்-

அறமேந்தி நல்லறிவை ஏந்தி மிக்க
ஆர்வமுடன் குறிக்கோள்கள் ஏந்தி வந்தாய்!
திறமேந்திச் செயலாற்றும் உரனு மேந்திச்
செந்தமிழை நாவேந்தி அரிமாப் போல
மறமேந்தி நின்றாய்;சொல் முழக்கஞ் செய்தாய்!
மலைவேந்தித் துயின்றதமிழ் மக்கள் கண்கள்
நிறமேந்தி ஒளிபுரிய விழிக்க வைத்தே
நீமறைந்தாய்! இல்லை!எங்கள் நெஞ்சுள் ளாயே!

பாவேந்தி உலாவந்த பாவேந் தே.நீ
பறந்தேகி நான்காண்டும் பறந்த(து) ஐயோ!
பூவேந்தி யுள்ளத்தேன் சுவையை மீறும்
புவியேந்தும் பாடல்களைத் தந்தாய்! வெற்று
நாவேந்திக் கிடந்தவரை எழுப்பு வித்தெம்
நரம்பிலெலாம் தமிழ்க்குருதி ஓடச் செய்தாய்!
சாவேந்திச் சென்றாயோ? இல்லை! இல்லை!
தமிழேந்தி நெஞ்சமெல்லாம் வாழ்கின் றாயே!

துணிவேந்தித் 'தமிழியக்கம்' கண்டு சொன்னாய்!
தூங்காத நல்லுணர்வோ டெம்மைக் காத்தாய்!
பணிவேந்தி மடியேந்திக் கிடப்பார் நெஞ்சுள்
படையேந்தும் மறச்சுடரைக் கொளுத்தி வைத்தாய்
அணியேந்தி அலையலையாய்த் திரள்க! இந்நாள்
அரசமைப்போம்! எனச்சங்கம் ஊது வித்த
மணியேந்தும் முடியேந்தா மன்னர் மன்ன,
மறந்தாயா? இல்லை!எம்நெஞ் சொளிர்கின் றாயே!

வாழ்வேந்திச் சிறக்கின்ற இயற்கை ஏந்தும்
வாயிலெல்லாம் நல்"அழகின் சிரிப்பு" கண்டாய்!
தாழ்வேந்தி இன்றிருக்கும் தமிழ்த்தாய்க் கால்கள்
தாங்குகின்ற விலங்கொடிக்க வாழ்நாள் தந்தாய்!
சூழ்வேந்தி வாழாத புலவன் ஆனாய்!
தொலையாத துன்பங்கள் நோற்றாய்! பொன்போல்
வீழ்வேந்திப் போகாமல் சுடரு கின்றாய்!
விணையேந்தித் தமிழோடு தமிழா னாயே!

பாவேந்தரின் தமிழ்ப் பண்பு!

ஒரு முறை பாவேந்தர் ஓய்வுப் பணம் (பென்சன்) பெற்றுக் கொண்டு இழுவண்டியில் வந்துக்கொண்டிருந்தார். அப்பொழுது வண்டிக்காரர் அழுது கொண்டிருப்பதைக் கண்டு "ஏன் அழுகிருய்" என்று கேட்டார். அதற்கு வண்டிக்காரர் "ஒன்றுமில்லீங்க" என்று குழைந்தாராம். "ஒன்றுமில்லை என்ருல் பின் ஏன் அழுகிருய்? என்று மீண்டும் கேட்டாராம் நம் பாவேந்தர். அதற்கு வண்டிக்காரர், "ஐயா என் மனைவி கருப்பமாக இருக்கிருள்; அவளுக்கு மருந்து வாங்கவும் ஊசி போடவும் பணமில்லை; பலரிடம் கேட்டுப் பார்த்தும் பயனில்லை; அவள் கை, கால்கள் வீக்கமும் தணிந்தபாடில்லை; அதற்கு என்ன செய்வது என்று எண்ணி, எண்ணி நானே அழுதுகொண்டிருந்தேன்" என்று புலம்பியவாறே கூறிஞர். இதைக் கேட்ட பாவேந்தர் "அதை ஏன் என்னிடம்சொல்லியிருக்கக்கூடாது?'இந்தா' என்று ஓய்வுப்பணம் உருபா ஐம்பதையும் எடுத்துக் கொடுத்தபடி "போய் முதலில் உன் மனைவியைக் காப்பாற்று; ஆனல் இதை என் வீட்டில் சொல்லிவிடாதே; நானே சொல்லிக் கொள்கிறேன்." என்று கூறி விட்டு வீட்டிற்கு வந்தாராம். என்னே தமிழ்ப் பண்பு?!

இந் நிகழ்ச்சியைப் பெங்களூர் "தமிழ்மன்றத்"தின் "பாரதி தாசன் நினைவு" விழாவில் திரு. பெருஞ்சித்திரனர் அவர்கள் கூறினர்.

—செய்தி: சி. பூ. மணி, பெங்களூர்-21.

பழனியம்மா பாவேந்தரின்மேல் கொண்ட அன்பு.

அண்மையில் பாவேந்தர் மனைவி திருவாட்டி. பழனியம்மா அவர்கள் நம் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அக்கால் **தென்மொழி பாவேந்தர் நினைவிதழ்** அச்சாகிக் கொண்டிருந்தது. என் தங்கை செந்தாமரை வெந்நீர் அடுப்பில் வீணன அச்சுத்தாள்களையும்போட்டு அடுப்பை எரித்துக்கொண்டிருந்தாள். பழனியம்மா தாள்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிழித்துக் கொடுத்தபடி அவளுக்கு துணை செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது பாவேந்தர் படங்கள் அச்சாகியிருந்த சில வீணன தாள்களும் அவற்றில் இருந்தன. அப்படங்களையெல்லாம், அடுப்பிலெரிய மனமின்றிக் கிழித்துத் தனியே வைத்துவிட்டு மீதியை எரிக்கக் கொடுத்தார்கள்.

அவர்கள் பாவேந்தர்மேல் வைத்த அன்புதான் என்னே!

—மா. பூங்குன்றன் (பெருஞ்சித்திரனரின் மகன்)

சுவடி 5 ஓலை 12–இன் தொடர்ச்சி.

உயிரினங்களின் தந்நலங் கருதாமை
SELF-SACRIFICE AMONG LIVING THINGS

சாமு. ஆபிரகாம், தலைவர், பட்டப் பின்படிப்பு,
உயிரியல்துறை, அமெரிக்கன் கல்லூரி.

ஆவெளியா அல்லது கடற்பன்றியின் (Sea-cow), அருங்குணம்:

பசிபிக் மாக்கடலில் தெல்லி கடற்பன்றி (Stellers Sea Cow) என்ற ஒருவகைப் பாலூட்டி வாழ்ந்ததை மீகாமன்கள் 1741-ஆம் ஆண்டுதான் கண்டுபிடித்தனர். ஆனால் அவ்வினமே வேட்டையாடப் பட்டு 1768-ஆம் ஆண்டு அளவில் அறவே ஒழிந்தது.

அவை தம்மினத்தில் நோய்வாய்ப்பட்டவற்றிற்கு உதவுவதில் பேராவல் கொண்டனவாம். நோயுற்ற நண்பன் கடலில் மூழ்கிவிடாத படி மிகுந்த பன்றிகள் ஒன்றாகக்கூடி, ஒரு தொட்டில்போல் தங்கள் உடம்பை ஒட்டிவைத்து, அத்தொட்டிலிலே நோய்வாய்ப்பட்டதைக் காப்பதைக் கடற்பயணிகள் கண்டனர். இத்தந்நலமின்மையே அவை பூண்டோடு ஒழிவதற்குக் காரணமாயிருந்தது எனலாம். ஏனெனில் உடலால் தொட்டிலமைத்து நோயுற்ற நண்பனைத் தாங்கும் போது பெருஞ் சுறுமீன்களும். வாள்போல் நீண்டு கூர்மையான தாடைகளை யுடைய வாள்மீன்களும் (Sword Fish) அக்கடற் பன்றிகளைக் குத்திச் சிதைவாக்கிக் கொன்றுவிடுமாம். அக்காரணத்தாலும் அவை அமைதியாகஇருந்ததாலும் அவற்றின் இறைச்சிக்காகமக்கள் அவற்றை இடையறாது வேட்டையாடினதாலும் அவ்வினமேஇக்காலத்திலில்லாது இறந்தது.

எறும்புகளின் அருங்குணம்: எறும்புகளின் குழுகாய வாழ்க்கை, அமைப்பு யாவர்க்கும் வியப்பூட்டும். கூர்தல் அறத்தில் (Evolution) எறும்புகளின் மனநிலை உயர்ந்த இடத்தில் உள்ளது. எறும்புகள் தம் குழுகாயத்தைச் சேர்ந்த பிற எறும்புகளிடத்தில் மிகுதியும் ஆர்வங் காட்டுகின்றன. எறும்புகளிற் சில தம் வயிற்றை மிகவும் விரித்து மிகுதியும் உணவுப் பொருளை உட்கொள்ளுந் தன்மையன. அவை தம் வயிற்றைத் தாம் விரும்பியவாறு விரிக்கவும், சுருக்கவும் கூடும். மனம் தகுதி நிலையுற்ற இவ்வெறும்புகள் தங்கள் புற்றை விட்டு வெளியேறி இரை தேடுங்கால் தம் வயிற்றை விரித்து எவ்வளவு உணவை உட்-

கொள்ள முடியுமோ. அவ்வளவு உணவை உட்கொண்டு, அவ்வுணவில் ஒரு சிறு பகுதியை மட்டும் தாம் பயன்படுத்தித் தாம் உட்கொண்ட உணவின் பெரும்பகுதியைத் தம் உடன் பிறந்தாருக்கு மனமுவந்து கக்கி அளிக்கின்றன. அவ்வாறு பிற எறும்புகளை ஊட்ட உதவும் எறும்புகளின் வயிற்றைக் 'குமுகாய வயிறு' என்பர். பிற எறும்புகளிடமிருந்து பெற்ற உணவையும் தமக்கு வேண்டிய அளவே பயன்படுத்தி எஞ்சியவற்றை மற்றை எறும்புகளுக்கு ஈந்து வாழ்கின்றன.

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'

என்றவள்ளுவர் ஆணைவழி அவ்வெறும்புகள் ஒழுகுகின்றன, ஈத்துவக்கும் இன்பங் கண்ட அவை விருந்தோம்பி மிச்சில் மிசையும் பண்பினவாக விளங்குகின்றன. உணவுப் பஞ்சம் தாண்டவம் ஆடும் பொழுது உணவுப் பொருளைக் கள்ளத்தனமாகப் பதுக்கி வைத்துக் கொள்ளை ஊதியம் திரட்டும் மாந்தர், எறும்புகளின் தந்நலங்கருதா ஒப்புரவு வாழ்க்கையைப் பின்பற்றுவார்களா? வள்ளுவர் உரைத்த விருந்தோம்பி மிச்சில் மிசைவானுக்கு எடுத்துக்காட்டாக எறும்புகளின் செயல் அமைதல் பெரும் வியப்பன்றோ!

கலைமானின் உலையா மரம்;

பம்பாய் மாநிலத்தில் ஒரு காட்டிலுள்ள ஒரு குட்டையில் ஒரு மான்குட்டி சேற்றில் பாதி புதைந்து பதைபதைத்து நின்றது. குட்டையின் ஓரத்தில் ஆறு செந்நாய்கள் நின்று அந்த மான் குட்டியை உண்ணத் திட்டமிட்டுக் கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு கலைமான் எங்கிருந்தோ ஓடிவந்து, சேற்றிலிறங்கி ஆலைவாய்க் கரும்பெனவும், அலைவாய்த் துரும்பெனவும் பதைத்து நின்ற மான் குட்டிக்கு, "அஞ்சேல்" என்பதுபோல அருகில் நின்றது. அந்நிலையில் மான்குட்டியின் மீது பாய்ந்த செந்நாய் ஒன்றைக் கலைமான் தன் கொம்பால் விசும்பில் வாரி எறிந்தது. அது வானில் நாலைந்து முறை சுழன்று சேற்றில் விழுந்தது. அதற்குப் பின்னர் அதனால் எழுந்திருக்கவே முடியவில்லை. சிறிது நேரத்திற்குப் பின்னர் பெண் நாய் ஒன்று அம்மான்குட்டிமேல் பாய்ந்தது. அவ்வுழை (கலைமான்) அதனை உடனே மிதித்து உளையுள் அழுத்தி விட்டது. என்னே அருள் உள்ளம்! அவ்விள மான்குட்டி தன்குட்டி யன்று எனினும், கைம்மாறு கருதாது அக்கலை அக்குட்டிக்கு உதவினது. இம்மையிற் செய்தது, மறுமைக்கு

ஆமெனும் அறவிலை வணிகன் ஆய் அலன்'' என்றார் ஆயைப்போற்றிய புலவர். மேற்கூறிய கலைமானைக் கைம்மாறுகருதா ஆய் வள்ளலுக்கு ஒப்பிட்டால் மிகையாகுமா?

பறவைகளின் அருள்:

விலங்கினங்களைப்போல் பறவைகளும் நோயுற்ற பறவைக்கும் அல்லது வலிவிழந்த பறவைக்கும் இரங்குகின்றன. உதவி செய்யவும் இறங்குகின்றன. கூட்டாக உள்ள சிட்டுகள் ஓரிடத்தில் உணவு உண்கையில், ஆங்கு நோய்வாய்ப்பட்ட புள் ஒன்று இருக்குமானால் அஃது உண்ணும் வரையில், பிற பறவைகள் சற்றுப் பின்வாங்குகின்றன. சிலர், முதலாவது உண்ண இசையப்பட்ட பறவை மற்றவையோடு போரிடக்கூடிய பறவையாக இருக்கலாம் ஆனால் கூர்ந்து நோக்கியவர்கள் பறவைகள் காயப்பட்ட தம் இனத்தவர்க்கு உதவுகின்றன என்று கண்டுள்ளார்கள். பின்வரும் எடுத்துக்காட்டு இக்கருத்தை வலியுறுத்தும்.

கில்பர்ட் (Hilbert Siegler) என்னும் உயிர்நூல் வல்லுநர் குளிர்ந்த கனடா நாட்டுப் பகுதியிலுள்ள பைன் (Pine) மரக்காட்டிலே பனங்காடை போன்ற ஒரு பறவை (Jay) இன்னொரு காடைக்கு உணவு ஊட்டுவதைக் கண்டார். பொதுவாகப் பறவைகள் குஞ்சுகளுக்கு உணவூட்டும்; கலவிக் காலத்தில் காதல் பரிசாக ஆண்பறவை பெண்பறவைக்கு உணவூட்டுவதும் உண்டு. கில்பர்ட் கண்ட காலம் கலவிக் காலமன்று. எனவே அக்காட்சி அவருக்கு ஒரு புதிராக இருந்தது. உண்மையைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காக அவர் தமது தொலைநோக்கி (Binocular) யால் பார்த்தார். அவர் கண்ட காட்சி அவரது நெஞ்சைக்கரைக்கும் ஒரு நிகழ்ச்சி உணவூட்டப்பட்ட பறவை ஒரு முதிர்ந்த பெரியபறவை இரை கொத்த முடியாத அளவுக்கு அதன் அலகு உடைந்துபோய் இருந்தது. அதனால்தான் மற்றொரு பறவை பரிவுடன் அதற்கு உணவு ஊட்டியது.

நமது நாட்டிலுள்ள அசாம் காட்டில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஒருவர் கல்லால் எறிந்து இரு சிறகிகளை விரட்டினார் இரு சிறகிகளும் விசும்பை நோக்கி எழும்பிப் பறந்தன. ஆனால் அவற்றில் ஒன்று நட்டாற்று நீரில் விழுந்தது. அடுத்த பறவை, தன் நண்பனது இன்னலை நீக்க மின்னல் வேகத்தில் நீருக்குள் பாய்ந்து நீரில் மிதந்த பறவை

யின்கீழ் நீந்தி அதைப் பத்தடி உயரத்துக்குத் தூக்கியது உடனே நொண்டியான பறவையும் தன் இறக்கைகளை அடித்துப் பறந்து சென்றது.

நாயினது நற்பண்பு;

நாயினது பண்பைப் போற்றிய நாலடியார் ஆசிரியர்,

“யானையனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்”

என்று நவின்று நாய்க்கொப்பானவர் நட்பைக் கொள்ளவேண்டுமென்றார். ஈண்டு நாயினது தன்னலங்கருதா— கைம்மாறு கருதா உதவியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இலாசு ஏஞ்சல்சு (Los angels) என்ற பட்டினத்தின் ஒரு தெருவிலே இரு நாய்கள் விளையாடிக்கொண்டிருந்தன. அதிலே ஒன்று அங்கு வந்து கொண்டிருந்த தானுந்தியால் (Automobile) கொல்லப்பட்டது. அதனுடன் விளையாடிக் கொண்டிருந்த மற்ற நாய்க்கு நிகழ்ந்தது தெரியாது. அஃது இறந்த நாயின் பக்கத்தில் போய் நின்று கவனித்தது. தனது நண்பனுக்கு உடல்நலக்குறைவு என்று எண்ணியது போலும். ஆனாலும் தன் நண்பன் தெருவின் நடுவில் கிடக்கலாமா? உடனே தன் நண்பன் கழுத்தில் கட்டியிருந்த கழுத்துப் பட்டையைக் கவ்வி நண்பினை இழுத்துத் தெரு ஓரத்தில் போட்டுக் காவல்காத்து நின்றது! அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்!

வேட்டையாடச் சென்ற தன் சொந்தக்காரர் திடீரென இறந்து போனபோதுங்கூட அவ்வேட்டைக்காரனது நாய் அவனைவிட்டு அணுவளவு தொலைவுகூட அகலாது அவன் உடம்பின் பக்கத்தில் உணவின்றி மூன்றுதிங்கள் வாடையால் மெலிந்து கிடந்த நாயின் கதை-நாயின் தந்நலங்கருதாத் தகைமையை வெள்ளிடை மலைபோற் காட்டுகிறதன்றோ?

மாடுகளின் மாபெரும் பண்பாடு:

தென் ஆப்பிரிக்காவில் பிரிடோரியா என்ற பகுதியுண்டு. அங்கு நடந்த காட்சி ஒன்றை சி. பி டி. பெயர்சு (Beyers) என்பார் புகைப்

படமே எடுத்துள்ளார். கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன சில காட்டுமாடுகள். அதில் ஒன்று தன் நண்பர்களை விட்டுத் தண்ணீர் பருகவந்தது. அப்போது ஓர் அரிமா அம்மாட்டின் முதுகின்மேல் பாய்ந்து ஏறி அதை நிறுத்த முயன்றது. மாடு தன் முதுகின்மீதிருந்த அரிமாவைக் கீழே தள்ளித் தன்கொம்பால் அதைக்குத்தியது. செந்நீர் சிந்த, அரிமா தரையில் உருண்டது. அதைப்பார்த்த இன்னோர் அரிமா காயமடைந்ததற்கு உதவச் சென்றது. இரு அரிமாக்களும் அம் மாட்டை விரட்டின. காயப்பட்ட அரிமா மறுபடியும் அம்மாட்டின் முதுகின்மேல் பாய்ந்து தன் கூரிய உகிர்களை அம்மாட்டு முதுகின் மேல் பதித்து அதை நிறுத்த முயன்றது. சிறிது நேரத்தில் மாடும் அரிமாவும் சேர்ந்து விழுந்து புரண்டன. இக்காட்சியைக் கண்ணுற்ற வேறு நான்கு மாடுகள் தங்கள் நண்பனுகிய, தனியே போராடும் மாட்டைக் காப்பாற்ற ஓடிவந்தன; அவற்றைக் கண்ட இரு அரிமாக்களும் ஓட்டம் எடுத்தன. மாடுகளின் இளகிய உள்ளம் என்னே! ஆகவே ஆறறிவு படைத்த மக்களும் பின்பற்றக் கூடிய தந்நலங்கருதாது, கைம்மாறு வேண்டாது உதவும் மாபெரும் தன்மை விலங்கினங்களிடமும் பறவைகள் மாட்டும் விளங்குதல் வியப்பூட்டுகின்றது. ஆனுல் கைம்மாறு கருதாது உதவுதல் மாந்தனிடத்தில் மட்டும் அமைந்துள்ளதா? வெளி விரிவு அல்லது கூர்தலறம் (Evolution) என்ற கொள்கைப்படி மாந்தன் அவனது முன்னேடிகளான உயிர்களிடமிருந்தே இவ்வரிய பெற்றியைப் பெற்றிருக்க வேண்டுமென்பது ஒரு சாரார்து முடிவு. இதற்கு மேற்கூரிய நிகழ்ச்சிகளே சான்றுகளாகும். மேற்கூறிய நற்பண்புகள் மாந்தன் மாட்டும் காணப்படுமானுல், அவன் பண்புகளை எல்லாரிடத்தும் எக்காலத்தும் காண்பிக்கலாமே? மாக்களிடமும் அப் பண்புகள் உண்டு. அவையும் மக்களைப்போல் அவ்வப்போது அப்பண்புகளைச் செயலில் காட்டுகின்றன. ⊖

உறுப்பினர்கள் கவனிக்க

இந்த இதழ் முதற்கொண்டு தென்மொழியின் விலை 75காசாக உயர்த்தப்பட்டுள்ளதால், முன்பே உறுப்பினர் கட்டணம்விடுத்து உறுப்பினராகப் பதிந்தவர்கள், மேற்கொண்டு விடுக்க வேண்டிய எச்சத்தொகையை வேறொரு பக்கத்தில் அறிவித்துள்ளோம். எனவே உறுப்பினர்கள் அவரவர்களின் எண்களுக்குரிய எச்சத் தொகைகளை ஒரு கிழமைக்குள் விடுக்க வேண்டுகின்ருேம். தொகை விடுக்காதவர்களுக்கு அவற்றிற்குரிய இதழ்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே நிறுத்தப்பட்டுவிடும் என்று எச்சரிக்கின்ருேம்.

—அமைச்சர்.

தென்மொழி அன்பர்கள் கவனிக்க

0 'தென்மொழி' தமிழர்களின் பொதுச் சொத்து.

0 தமிழ், தமிழகம், தமிழர் என்ற அளவில் என்றென்றைக்கும் நின்றுதொண்டாற்றும் தமிழர்களின் காவல்படை,'தென்மொழி'

0 'தென்மொழி' நிற்கக்கூடாது; நின்றால் குமுகாய வளர்ச்சி, அரசியல் விழிப்புணர்வு, மொழி முன்னேற்றம் முதலியயாவும் திசை திரும்பிப்போகும் என்பதை ஒவ்வொரு தமிழரும் நினைவில்வைத்துக்கொள்ளுதல்வேண்டும். தென்மொழி இதுவரை நடந்துவந்த முறையிலும், இனி நடையிடப் போகும் வகையிலும், தமிழர்களிடை ஒரு புத்துணர்வு பெருக்கெடுத்தோடுவதையும், தமிழினம் மறுமலர்ச்சி அடைந்து வருவதையும் உண்மைத் தமிழர் கூர்ந்து காண்பார்களாக.

0 கட்சிப் பூசல்களிலிருந்தும், சாதிக் கிறுக்குகளுலிருந்தும், சமயப் போராட்டங்களிலிருந்தும் தமிழர் விடுபட்டுத் தன்மானமும், தன்னுணர்வும், தன்னாற்றலும். பெற்றுத் தமிழக ஆட்சியை அமைப்பதே நமக்கு உண்மையான விடுதலையாம் என்பது தென்மொழியின் அசைக்க முடியாத கொள்கை யாகும்.

0 கருத்து நிலையில், நடுநிலையான மெய்க்கருத்துகளை யாருக்கும் அஞ்சாது கூறிப் போரிடும் வகையில் தென்மொழி தனக்குத் தானே நிகரானது.

0 தென்மொழிக்கு எந்தக்கட்சியினரும் துணைசெய்ய மாட்டார்கள். காரணம் அரசியல்காரர்களின் போலிப் பொய்யுரைகளையும் ஏமாற்று நடவடிக்கைகளையும் தென்மொழி மதிப்பதில்லை.

0 குல, சமய, கட்சி வேறுபாடற்ற உண்மைத் தமிழர்கள்தாம் தமிழைக் காக்கமுடியும்; தமிழ் காக்கும் தென்மொழியையும் காக்க முடியும்.

0 தென்மொழி நம்பியிருந்த, அருளும், பொருளும் நிரம்பிய ஓரிரு பெரியவர்களும்கூட, தென்மொழிக்கு உதவ முன்வரவில்லை. காரணம் எவர்க்கும் தென்மொழி விளம்பர வண்டியாகப் பயன் படுத்தப் படுவதில்லை.

0 தென்மொழி வார வாரத் தமிழகத்தில் போலி முகங்களுக்கும் பொய்யுரை வாய்களுக்கும் மதிப்பிழந்து போவது உண்மை; உண்மை; முற்றிலும் உண்மை!

0 தென்மொழிக்கு இக்கால் மிகமிக வேண்டியது பொருள் வலிவே. ஒவ்வொரு நாளும் அது தன்னை நிலைநிறுத்திக்கொள்ள அரும்பாடு பட்டு வருகின்றது என்பது, இதனைச் சேய்மையிலிருந்து பார்க்கும் மேம்போக்குக் காரர்களுக்கும், இதன் உள்முகச்செய்திகளைப் புறம்பேசி மகிழும் வாய்வலித்தக் காரர்களுக்கும் தெரியாது. இதனை நெருங்கிப் பார்ப்பார்தம் மனநிலைக்குத் தென்மொழியின் உண்மைப் போராட்டமும் உயிர் முயற்சியும் விளங்காமல் போகாது.

0 ‘நடுவனது எய்த இருதலையும் எய்தும்’ என்றபடி, பொருள் ஒன்றே அறத்தையும் இன்பத்தையும் காக்கும் காவற் கருவியாக உள்ளது. செருநர் செருக்கருக்கும் எஃகு அதனில் கூறியது இல்லையன்றோ?

0 இக்கால் உற்ற தாள் விலையேற்றமும் அஞ்சல் கட்டண உயர்ச்சியும் தென்மொழி போன்ற இதழ்களை மிகவும் தாக்குவன.

0 எனவே ‘தென்மொழி’ தனியிதழின் விலை இவ்விதழ் முதல் 75 காசாகவும், ஆண்டுக்கட்டணம் 9 உருபாவாகவும் உயர்த்தப் பட்டுள்ளன இவ் விலையேற்றம் தென்மொழியை வீழாது காக்கும். இதன் பிறவிளக்கங்களை வேறிடத்துக் காண்க.

0 ‘தென்மொழி’ நடத்தும் தமிழ்ச்சிட்டின் விலையும் 20 காசாக உயர்த்தப் பட்டுள்ளது. மெய்ம்மைத் தமிழன்பர்கள் இவ் விலையேற்றங்களைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

0 தென்மொழி வளர்ச்சியில் நாட்டமும் அக்கறையும் கொண்ட தமிழன்பர் யாவரும் இதனைப் பொருளால் வலிவு படுத்த நன்கொடைகள் திரட்டி விடுத்தும், உறுப்பினர்களைச் சேர்த்தும் உதவ முன்வருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

0 தென்மொழி படிப்பவர்கள் ஒவ்வோர் ஆங்கில 5-ஆம் பக்கலையும் தென்மொழி நாள் என்று கொண்டு, ஒவ்வொரு மாதமும் அந்நாளில் ஓர் உருபா நன்கொடையாக விடுப்பினும், அத்தொகை தென்மொழிக்கு அச்சாணி போன்று உதவும். ஏனெனில் தென்மொழி எல்லார்க்கும் பொதுவான விளைநிலம்; இதில்

உள்ள கல்லும், புல்லும்கூட தமிழர்க்கே சொந்தம். இதில் ஈடு படுத்தும் பொருள் தமிழினத்தின் எய்ப்பில் வைப்பு. என் மனைவிக்கோ, மக்களுக்கோ நான் என்றும் சொத்துத் தேடியதில்லை; தேடப்போவதுமில்லை.

0 எனவே துறைதோறும் துறைதோறும் தென்மொழிக்குத் துணை நிற்குமாறு உண்மைத் தமிழ் நெஞ்சங்களைப் பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம்.

0 உணர்க! உழைக்க! உருப்படுக! —பெருஞ்சித்திரன்.

பாவேந்தரும், கலைவாணரும்.

பெங்களூரில் 'திருக்குறள் மாநாடு' நடந்த வேளை இரண்டாவது நாளன்று மாநாட்டில் கூட்டம் நிரம்பி வழிந்திருந்தது. பாவேந்தர் தலைமையுரை ஆற்றிக்கொண்டிருந்தார். அப்போது அடுத்த நிகழ்ச்சியாகவிருந்த வில்லுப்பாட்டுக்காக கலைவாணர் திரு. கிருட்டிணன் அவர்கள், மாநாட்டுப் பந்தலுக்குள் வந்தார். கூட்டத்திலுள்ள சிறு பிரிவினர், "அதோ கலைவாணர், கலைவாணர்" என்று சலசலத்தனர். அதுகேட்ட பாவேந்தர் அவர்கள், சிறிதுநேரம் தம் தலைமையுரையை நிறுத்திவிட்டு அமைதியாக இருந்தார். மேடைக்குச் சென்ற கலைவாணர் பாவேந்தருக்கு முதன் முதலில் வணக்கம் செலுத்திவிட்டுப் பிறகு சென்று அமர்ந்தார். அதன்பிறகு பாவேந்தர் அவர்கள் கூட்டத்தினரை நோக்கி "அவரைப் பார்த்தாகிவிட்டதா?" என்று கேட்டார். பாவேந்தரின் பெருந்தன்மையை உணர்ந்த கலைவாணர், உடனே இருகைகூப்பிப் பாவேந்தரை நோக்கி "அவர்கள் என்னைப் பார்த்தாகி விட்டது ஐயா, பார்த்தாகி விட்டது" என்று கும்பிட்டவாறு கூறினர். அதன்பிறகு, பாவேந்தர் அவர்கள் அரியதொரு சொற்பொழிவை நிகழ்த்திமுடித்தார். அடுத்து வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைத் தொடங்கிய கலைவாணர், தம் வாழ்த்துப் பகுதியில் முதல்வரியாக, "புரட்சிக் கவிஞரை ஈன்றெடுத்துப் புகழ்கொண்ட தென்னாடு" எனப்பாடி தலைவணங்கினர்.

காத்திருந்த கூட்டத்தினர், கோடை மழைபோல் தொடர்ந்து கையொலி எழுப்பிப் பந்தலை அதிரவைத்தனர். "பாவேந்தரே எங்கள் தவற்றைப்பொறுத்துக் கொள்ளுங்கள்" என்பதுபோல் இருந்தது அது.

செய்தி: மா. வேலவன், பெங்களூர்-17.

பாரதிதாசன் பண்புநலன்

—புலவர்-திருமேனி நாகராசன், காரைக்கால்.

"பாவலராய்ப் பிறக்கவேண்டும்" என்பது வழக்கு. அப்படிப் பிறந்தவரே பாரதிதாசன். அப்படிக்கின்றி இக்காலத்துப் பாவலராய் மாறியர் சில்லோர். அவரெல்லாம் போலிபரும் புல்லியருமாவர். பாரதிதாசன் உண்மைத் தமிழ்ப் புலவராய் உலகில் தோன்றினரென்க. அவர் முழுமைபெற்ற ஒரு பாவலர் எப்படி விளங்க வேண்டுமோ அப்படி விளங்கியவர். அவர் கருவிலே திருவுற்றக் கன்னித் தமிழ்க் காவலர்.

பாரதிதாசன்பால் அமைந்து கிடந்த பண்புநலன்கள் பலப்பல. அவற்றைப் பாரித்துரைத்தற்கு நாவொன்று போதாது; எழுதிக் காட்டற்கு ஏடுகளும் பற்ற. அவர் தலைமைசான்ற தமிழ்க் காதலர்; இயற்கை நுண்ணோக்காளர்; பெருமிதம் மிக்கவர்; அஞ்சாநெஞ்சத்தினர்; அரசியலறிவு சான்றவர்; பெரும் புரட்சியாளர். இப்படிப்பட்ட ஒரு பாவலர் பாரதிதாசற்கு முன்னும், பின்னும் இருந்திலரே. அவர் தாமே தமக்கொரு எடுத்துக்காட்டாயும் எல்லையாயும் விளங்கினரென்க

அவர் தமிழ்க் காதலில் கழகச் சான்றோர்க்கு நிகராவார்; இயற்கையை நுணித்தறிந்து பாடுவதில் நல்லந்துவனாரை ஒப்பார்; பெருமிதத்தில் மறைமலையை மானுவார்; அஞ்சா நெஞ்சத்தில் கோவூர் கிழாரையும் மிஞ்சுவார்; அரசியல் புலமையில் பிசிராந்தையாரைப் பொருவார்; புரட்சியில், பிரெஞ்சுநாட்டுப் புரட்சிப் பாவலர்களோடு எண்ணப்படுவார்.

இனிப் பாரதிதாசன் பண்புகளைச் சிறுகச்சிறுக முறையே காண்பாம். பெருகக்காண விழையின் பெருநூலாய்ப் போய் முடியுமென்க. பாரதிதாசன் தமிழில் தலைமை சான்ற காதலர் என்பது வெளிப்படை. அவர் தமிழுக்கே தலைதந்தவர்; தம் உயிரும் உயிர்ப்பும் தமிழாயினவர் என்னை?

"—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்" எனவும்
"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!"-எனவும்
"எங்கள்வ ாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"- எனவும் அவர் கூறுமாற்

னுன் அறிக. அவர் தமிழ், தமிழ்நாடு, தமிழர்க்காகவே இறுதிவரையி லும் பாடு மிகப் பட்டார்.

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத் தாலும்விடேன்" எனவும்

"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன!"-எனவும் அவர் சொலு

மாற்றான் அவர்தம தமிழர், தமிழ்நாட்டுப் பற்றைக்கண்டு களிகொள்க.

அவர் சிறந்த இயற்கை நுண்ணோக்காளர் என்பது குன்றின் மேலிட்ட விளக்காம். எந்த ஓர் உண்மைப் பாவலனும் இயற்கையை நுணித்தறிதலில் வல்லவனே. இத்தமிழ்ப் பாவலரோவெனில் இயற் கையோடு ஒன்றிப் பாடுதலில் மிக வல்லவரே. அவர் உலகியல் பொருள்களைப் பார்த்துப் பாடுந்திறன் உணர்வினின் வல்லோர்க்கு உவகை உண்டாக்கும். என்னை? கிளியின் உறுப்புப் பற்றி அவர் பாடல் காண்க:-

"இலவின் காய் போலும் செக்கச்
செவேலென இருக்கும் மூக்கும்
இலகிடு மணல் தக்காளி
எழில்ஒளிச் செங்காய்க் கண்ணும்
நிலைஒளி தழுவும் மாவின்
நெட்டிலை வாலும் கொண்டாய்
பலர்புகழ் கின்ற பச்சைப்
பசுங்கிளி வாராய்! வாராய்!"

இன்னும்

"பெருங்கடல் ஓர மெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல் மெத்தை........" எனவும்,

"பகல்வானிற் கதிரின் வீச்சுப்
பரந்தது! முகிலி னங்கள்
வகைவகை ஒவி யங்கள்
வழங்கின: யானைக் கூட்டம்!
தகதக எனும்மா ணிக்க

அருவிகள்! நீலச் சாரல்!
புகைக்கூட்டம்! எரிமலைகள்!
பொன் வேங்கை! மணிப்பூஞ் சோலை!" எனவும் அவர் பாடுவது கேட்டு அவர் புலமை தெளிகவே!

பாரதிதாசன் பெருமிதம் மிக்கவர். தமக்குப் பட்டதைப் பட்ட வாறே பகரும் பான்மையர். அண்ணாந்த தலை; குவடுபட எழுந்த தோள்கள்; அரிமா முழக்குப்போலும் பேச்சு; களிறு அசைவது போலும் நடை. இவையே அவரது பெருமித உணர்வுக்குத் தூண்கள். இவர் தமது காலத்தில் புதுவையில் அரசியல் துறையில் வல்லாண்மை பெற்றிருந்த தலைவர் பலரிடமும் ஏழை எளியவர்களை அழைத்துப் போய்த் தமக்கே உரிய செம்மாப்போடும் பீடோடும் மதிப்புரைத்து அவர்களுக்கு வாழ்வளித்ததுண்டு. சில வேளைகளில் புதுவை முதல்வர் திரு. குபேர் அவர்களின் வழியாகவும் சிலர்க்கு அலுவல் பெற்றுத் தந்ததுண்டாம். முதல்வருடன் அவர் பேசும் பேச்சு மிக்க பீடும், பெருமிதமும் நிறைந்தே இருக்குமாம். எனவே, அவரைப் பெருமிதத்திற்கொரு மலையெனில் பொருந்தும்.

அவர் அஞ்சா நெஞ்சத்தினருமாவார். அச்சம் அவர் அறியாதது, ஆண்மை ஒன்றே அவர் அறிந்தது. எதனையும் துணிந்தெதிர்க்கும் பெயரா வலியினர். பிறர் எத்துணைத்தாம் உயர்ந்தவராயினும், அவர் செய்யும் கயமை காணின் பொறார். அவருக்கு நேருக்குநேர் நின்று கனன்று காறி உமிழ்வார். தாம் கண்டது மெய்யெனில், உலகே எதிர்த்து வரினும் அஞ்சார். அறம் கோடுவது தில்லியாயினும் சீறி எழுவார். வல்லமைபெற்ற வடவரையும் தூசென முழங்கி நிற்பார். அவரின் துணிவைக்காணின் மானும் மறப்புலி திறம்பெறும்; கோழையும் வயவனுவான் என்னே?

"அல்லற் கஞ்சோம்; கடுமொழி
சொல்லற் கஞ்சோம்; ஒரு சிறை
சொல்லற் கஞ்சோம்; அஞ்சோம்
தூக்குக் கஞ்சோம்"
"ஆட்டிப் படைப்பவர்க் கஞ்சுதல் வேண்டா!
அமைச்சர் என்போர்க்கு மஞ்சுதல் வேண்டா!
காட்டிக் கொடுப்பார்க்கு மஞ்சுதல் வேண்டா!
கருத்திலாக் கட்சிகட் கஞ்சுதல் வேண்டா!

என்னும் பாடல்களான் அறிக.

பாரதிதாசன் ஓர் அரசியல் புலவருமாவார். அவர் ஒருமுறை புதுவை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். அவர் பேராயக்கட்சி வேட்பாளர் அல்லர். அவர் எதிர்த்தரப்பு வேட்பாளரே. அவரும் இக்காலத்துப் புதுவைச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராய் விளங்கும் திரு. சுப்பையா அவர்களும் புதுவையிலும், காரைக்காலிலும் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்வதுண்டு. அவர் சொற்பொழிவுகளுக்கு மக்கள் திரண்டு செல்வர். மக்கள் யாவரும் அவர் பொழிவில் தமிழ்ச்சுவையை மாந்தினர்; வீறுகொளப் பெற்றனர்; அரசியல் தெளிவு பெற்றனர். அவர் சட்டமன்ற உறுப்பினராக விருந்தபோது அவர் உரைக்கு அனைவருமே செவி கொடுத்தனர். அவரது அரசியல் மூதறிவு கண்டு மாற்றார் மருண்டனர். அவர் புதுவை அரசியல் விழுப்புணர்ச்சிக்கு வித்திட்டாரில் ஒப்பற்றவரென்க.

அவர் ஒரு புரட்சிப் பெரும் பாவலர் என்பதும் நிறைமொழியே. அவர், அறியாமை அளறில் அழுந்திக் கிடந்த தமிழரை மேம்படுத்த வந்த புரட்சிக்கனல். அவர் சாதியைச் சாடினார்; பழநெறிப் பாவியங்களைக் குப்பையில் தள்ளச் சொன்னார்; கைம்பெண் மறுமணத்தை வலியுறுத்தினார்; கலப்பு மணத்தை முன்னின்று நடாத்தினார். பின்னும் மண்பதையில் மண்டிக்கிடந்த அறிவிற்கு ஒவ்வா ஆரவாரப் பழக்கங்களை அகழ்ந்தெறிந்தார். பகுத்தறிவு இயக்கங்கண்டார். இப்படியெல்லாம் பலவாறு தமிழிலும், தமிழகத்திலும் புரட்சிக்கு வித்திட்டு அது பூத்துக் காய்த்துக் கனியத் துணை நின்றார். அவரே புரட்சிப் பெரும் புலவர். அவர் அல்லது பிறர் இல்லையாதல் அறிக.

எனவே, பாரதிதாசன் ஓர் ஒப்புயர்வற்ற முழுப்பெரும் புலவர் என்பது போதரும். அவர் மாட்சிமையுற்ற மேற்காட்டிய பண்புநலன்கள் உடையர் என்பதும் பெற்றும். அவர் பண்புகள் எடுத்துக்காட்டிய இவைமட்டும் அன்றே பிறவும் உளவாயினும் அவையெல்லாம் இவற்றுள் அடங்குமென்க. இவ்வரிமாவின் முழக்கம் நான்காண்டுகட்கு முன்னர் முடிவுற்றதாயினும், இனி நாலாயிரம் ஆண்டுகளாயினும் அதன் எதிரொலி தமிழர் உளத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பது ஒப்புக்கோள்.

'முழுமைப் பாவலர்; முத்தமிழ்ப் புலவர்;
எழுமையும் ஏமாப் புடைய ஏந்தல்;
இழந்தோம்; புரட்சிக் கனலைத்
தொழுதும் பெறுவங் கொல்லோ இனியே?''

புரட்சிப்பாவலன்

"செவ்வேள்"

பாவேந்தன் புரட்சிப்பா வலவன் என்று
பாவேந்தி நீட்டுகிறேன் ஏற்றுக் கொள்வீர்!
பூவேந்து பொழில்களிலே குளிர்ச்சி யைப்போல்
புனலேந்து வாவிகளில் தண்மை யைப்போல்
நாவேந்து தமிழ்ச்சொல்லில் இனிமை யைப்போல்
நாணேந்து பெண்ணிடத்தில் நிறையி னைப்போல்
பாவேந்தன் பாட்டிலெலாம் புரட்சி உண்டாம்!
பறையேந்திக் கொட்டுகிறேன் கேட்டுக் கொள்வீர்!

முன்மதிப்புப் பெற்றிருந்த தமிழர் வாழ்வை
முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்லத்
தன்மதிப்புக் கழகத்திற் சேர்ந்தான் யார்க்குந்
தலைவணங்காப் பாவேந்தன்! நாட்டு மக்கள்
நன்மதிப்பைப் பெற்றுயர்ந் தான்! அந்த நாளில்
நலம்விளைத்த பலபுரட்சி கண்டா னேனும்
என்மதிப்பில் அவன்செய்த பெரும்பு ரட்சி
இயற்றமிழ்க்குத் தொண்டுவந்த தொன்றே என்பேன்!

"தமிழென்றால் உமியென்று சொன்னோர் தாமுந்
தமிழ்நாட்டில் இருந்தார்கள்! அயலான் தந்த
உமியைத்தான் அவரெல்லாம் உணவென் றெண்ணி
உட்கார்ந்து தின்றார்கள்! உயர்பா வேந்தன்
தமிழென்றால் உயிரென்றான்' உயிர்போ லுந்
தமிழொன்றே நினையென்றான்! எதனால் என்றால்
அமிழ்தென்றால் தமிழென்றான்! அதைப்ப ழித்தார்
அவர்முகத்தில் உமிழென்றான்! புரட்சி செய்தான்!

மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றி
மண்தேய்ந்த பாட்டையிலே போதல் போல
ஆடுகளுள் முன்னாலே போவ தொன்றை
அடுத்துவரும் அவையெல்லாந் தொடர்தல் போலப்
பாடுபவர் எல்லாரும் பழைய பாட்டைப்
பாடிக்கொண் டிருக்கையிலே புதுவை வேந்தன்
வாடுபவர் பசீதீர்க்க வந்தான் போல
மறுமலர்ச்சிப் பாட்டெழுதிப் புரட்சி செய்தான்!

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்துக் கூட்டித்
தகுமுறையில் இளஞ்சூடு செய்த சாற்றில்
இனித்தநறுந் தேன்பெய்தால் சுவையைக் கூட்டும்!
எரிமிளகாய் இரண்டொன்று போட்டால் என்னும்?
"நினைத்தபடி பிறசொல்லை விரவிச் சேர்த்தால்
நிலைபெறுமா தமிழினிமை?" என்று கேட்டுத்
தனித்தமிழிற் பாவெழுதிப் புரட்சி செய்தான்
தமிழியக்கத் தாலதனை வளரச் செய்தான்!

சாதியெனும் ஒருகொடும்பேய் வெறியாட் டத்தால்
தமிழ்நாடு சீரழியக் கண்ட வேந்தன்
மோதியதைச் சாய்த்துவிட அடிநாள் தொட்டு
முனைமுகத்து நின்றிருந்தான்! சாதிப் பேயின்
பாதிஉயிர் தானெடுத்தான்! அதற்குள் கூற்றம்
பரிந்தழைக்கப் போய்விட்டான்! எனினும் உள்ள
மீதிஉயிர் தனையெடுக்கத் தனது பாடல்
மிடைந்திட்ட படைக்கலத்தை விட்டுச் சென்றான்! O

கடவுளரின் பெயர்சொல்லித் துறவு காண்பார்!
    கண்ணுக்கு மறைவாகக் கயமை சூழ்வார்!
மடம்வளரும்! வளருமவர் மதமுங் கூட!
    மற்றொன்றும் புறம்பாக வளரும்! அக்கால்
படவரவின் சூழலிலே வேட்டை யாடும்
    பருந்தைப்போல் பாவேந்தன் உருவெ டுத்தான்!
படபடெனத் தமிழ்வானில் சிறக டித்தான்!
    பழிபடர்ந்த சமயத்திற் புரட்சி செய்தான்!

பாட்டாளி கொட்டுகின்ற குருதிச் சேற்றில்
    பணக்காரக் குறுமுதலை நீந்தி ஆடி
நாட்டாண்மை செய்கின்ற நாட்டில் எங்கள்
    நாயகனும் பாவேந்தன் பாட்டைச் சொல்லக்
கேட்டாலே போதுமங்கே கிளர்ச்சி தோன்றும்!
    கீழ்மேலென் றுள்ளதனில் மாற்றம் தோன்றும்!
ஓட்டாண்டி யாயிருக்கும் உழைப்போர் கூட்டம்
    உதையாண்டி யாகிவிடப் புரட்சி தோன்றும்!

நண்பாடும் அயலவரால் தமிழர் வாழ்க்கை
    நடைமுறைகள் தடங்கெட்டுப் போகக் கண்டான்!
மண்பாடு புகழாளன் நம்பா வேந்தன்!
    மாஞ்சோலைக் குயிலாக மாறிவிட்டான்!
கண்பாடு கொள்ளாமல் கால மெல்லாம்
    கழகத்துக் காலத்தில் தமிழர் கண்ட
பண்பாடு புத்துயிர்பெற் றெழுதற் காகப்
    பண்பாடிப் பண்பாடி உலவி வந்தான்!

ஊர்பாடி னார்சிலபேர்! போர்செய் மன்னர்
    உரம்பாடி னார்சிலபேர்! செல்வர் வாழுஞ்
சீர்பாடி னார்சிலபேர்! அவர்தங் காமத்
    திறம்பாடி னார்சிலபேர்! பணங் கொடுப்பார்
பேர்பாடி னார்சிலபேர்! பதவி பட்டம்
    பெறப்பாடி னார்சிலபேர்! மொழியைக் காக்க
யார்பாடி னார்புதுவைப் பாவேந்தன்போல்
    அழகழகாய் அணியணியாய்ப் புரட்சிப் பாடல்!

தவறான கருத்துகள்.

-தமிழவேள்-

ஆங்கில மொழியைப்போல் தமிழ்மொழியும் உலகமெல்லாம் பரவ வேண்டுமென்றால் ஆங்கிலம் எவ்வாறு பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளுகிறதோ அவ்வாறே தமிழும் பிறமொழிச் சொற்களைத் தயங்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது ஒரு தவறான கருத்தாகும்.

ஆங்கிலம் பிறமொழிச் சொற்களை மிகுதியாக ஏற்றுக் கொண்டதனால்தான் உலகமெல்லாம் பரவியதா என்றால் இல்லை. ஆங்கிலேயர்கள் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று தங்கி ஆங்காங்கே இருந்த மக்களை அடிமைப் படுத்தி ஆளத்தொடங்கியதால்தான் ஆங்கிலம் உலகமெல்லாம் பரவ முடிந்தது. அப்படி ஆங்கிலம் உலகமெல்லாம் பரவியதாலேயே பிறமொழி சொற்கள் பலவற்றை அஃது ஏற்கவும் நேரிட்டது. ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டில் வந்து தங்கி ஆட்சி செலுத்தியதால்தானே "கட்டுமரம், மிளகுத்தண்ணீர், கூலி" என்னும் தமிழ்ச் சொற்கள் ஆங்கில மொழியில் இடம்பெற்றன? இல்லையெனில் இடம் பெற்றிருக்க இயலுமா?

ஆங்கிலம் ஐந்நூறு ஆண்டுகால வாழ்வே உடையமொழி தமிழோ ஐயாயிர ஆறாயிர ஆண்டுகால வாழ்வுடைய மொழி. ஆங்கிலம் தனக்கென தனியான சொல்வளம் இல்லாத மொழி. தமிழோ தனக்கெனத் தனியான சொல்வளம் மிக்கமொழி, சொல்வளமில்லாத ஒருமொழி பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்வதுபோல் சொல்வளமிக்க ஒருமொழியும் ஏற்கவேண்டும் என்று சொல்வது ஏற்புடையதாகுமா?

கையில் காசில்லாத ஒருவன் பிறரிடமிருந்து பொருள் திரட்டி ஒரு வீட்டைக் கட்டலாம். ஆனால் குவிந்து கிடக்கும் செல்வத்தை உடையவன் பிறரிடமிருந்து பொருள் திரட்டி வீடுகட்ட நினைக்கலாமா? வறியவன் ஒருவன் பிறரிடம் இரந்து நிற்பதைப்போல் செல்வன் ஒருவனும் பிறரிடம் சென்று இரந்து நிற்கலாமா? உலகில் வேறெந்த மொழியும் பெற்றில்லாத சொல்வளத்தைப்பெற்றுள்ளமொழியாயிற்றே தமிழ்! அந்தத் தமிழ்மொழியா பிறமொழிச் சொற்களை ஏற்கவேண்டுமென்று சொல்வது?

ஓரெழுத்தே சொல்லாக அமைந்து பொருள் தருகின்ற அழகைத் தமிழில் காண்பதுபோல் பிறமொழியில் காணமுடியுமா? வா, வை, போ, பூ, நீ, தீ, பா, கை, தை, ஈ, கோ, கா, ஆ (பசு); மா (விலங்கு ஏ (அம்பு); மூ (மூப்பு); மே (அன்பு); மை (அஞ்சனம்); ஊ (இறைச்சி); ஐ (அழகு); மீ (மேல்); தூ (வெண்மை); தே (கடவுள்); யா (ஒரு மரம்); வீ (மலர்); வௌ (கவர்தல்); நோ (துன்பப்படுதல்); சே (எருது); சோ (மதில்); இவ்வாறு தமிழில் உள்ள ஓரெழுத்துச் சொற்கள் எத்தனையோ!

ஒரு பொருளைக் குறிக்கவரும் பலசொற்கள் தமிழில் எவ்வளவு உள்ளன தெரியுமா? அரசனைக்குறிக்க எட்டுச் சொற்கள் உள்ளன: கோன், ஏந்தல், வேந்தன், மன்னன், குரிசில், இறைவன், வள்ளல், அண்ணல் என்பன அவை. வயலைக் குறிக்கப் பன்னிரண்டு சொற்கள் உள்ளன: அகணி, கம்பலை, கழனி, கைதை, கோட்டம், செறு, தடி, பண்ணை, பணை. பழனம், பானல், புலம் என்பன அவை. பேயைக் குறிக்கப் பதினான்கு சொற்கள் உள்ளன இதி, கடி, கூளி, சாவு, சோகு, வெறி, அலகை, கழுது, பிணம், மண்ணை, மயல், மருள், அறிவழி, குணங்கு என்பன அவை.

மரக்கலத்திற்கு வழங்கிய தமிழ்ப்பெயர்கள் இருபத்துமூன்றுதம். அவையாவன: பகடு, பன்றி, அம்பி, ஓடம், திமில், தோணி, படகு, பட்டிகை, யாநம், படுவை, தொள்ளம், பூணை, மிழவை, தெப்பம், வங்கம், பாதை, தங்கு, மதலை, சதா, பாரதி, நவ்வு, மோகம், நாவாய்.

சோற்றைக் குறிக்க வரும் சொற்கள் மட்டும் இருபத்து ஏழாகும். அவையாவன: அடிசில் அமலை, அவி, அவிழ், உணா, உண்கூழ், சொன்றி, துப்பு, தோரி, பருக்கை, பாத்து, பிசி, புகர், புழுக்கு, புற்கை பொம்மல், பொருகு, மடை, மிசை, மிதவை, மூரல், வல்சி, அழுது, அயினி, அமும்பு, ஊண், சதி.

சொல்லைக் குறிக்க வழங்கிய சொற்களோ முப்பது ஆகும். அவையாவன: அசைப்பு, அறை, இசை, இசைப்பு. இயம், உரை, கரை, கிளவி, குயில், கூற்று, செப்பு, தோல், தோற்றம், நுவற்சி, தொடி, பகர்ச்சி, பணி, பயில், பறை, பனுவல், பாணி, புகல், புகறல், பேச்சு, மறை, மாற்றம், மொழி, வாய்மை, விளம்பு, விறு.

ஆடையைக் குறிக்கத் தமிழில் உள்ள சொற்கள் எவ்வளவு தெரியுமா? நூல், இழை, சரடு, தொடர். துவணம், புனுவல். பிசின், பன்னூண்ட், நெய்யரி, மரவுரி, ஆசினி. இலக்கம், சீரம், சீரை, துகில், அறுவை, துணி, துண்டு, ஆசாரம், ஆசிடை, இடைதல், கலிங்கம், உடுக்கை, உடை; ஒடகம், ஒலியல், கந்தை, கத்தியம், கப்படம், கலை, கடாகம், காழகம், கூறை, கோடி. சம்பளம், சாடி, சிற்றில், குடி, சேலை, தானை, தூசு, துட்டி, தூரியம், கோடிகம், மிடியல், புடவை, படாம்; பட்டம், என நாற்பத்தெட்டு சொற்கள்!

அழகைக் குறிக்க வரும் தமிழ்ச்சொற்கள் எத்தனை தெரியுமா? ஐ, பூ, பை, அணி, அம், ஏர், களை, சீர், சேடு, தகை, தென், பொன், பணி, மாமழ, வாகு, அம்மை, அலரி, எழில், ஒண்மை, ஒப்பு, கவின், காயர், காரிகை, குழகு, கொம்மை, கோலம், செவ்வி, செழுமை, தகைமை, தையல், தோட்டி, நலம், நவ்வி, நன்கு, நோக்கு, பதம், பாங்கு, பொற்பு, மாண்பு, முருகு, யாணர், வடிவு, வண்மை, வளம், அணங்கு, நோக்கம், வகுப்பு, வனப்பு என நாற்பத்தெட்டு சொற்கள்.

ஒருபொருட் பல சொற்களைப் போலவே பல பொருள்தரும் ஒரு சொல்லாய் அமைந்த தமிழ்ச் சொற்களும் எத்தனையோ உள்ளன. கோடு என்ற சொல்லுக்கு மலை, நேர்க்கோடு, வளைவு, கொம்பு என நான்கு பொருள்கள். கார் என்ற சொல்லுக்கும் முகில், மழை, கரிய நிறம், கலப்பை என நான்கு பொருள்கள். அடி என்ற சொல் அளவு கோல், அடித்தல், கீழ்ப்பகுதி, முற்றும் துறந்த அடிகள் என்று நான்கு பொருள்களைத் தரும். படி என்ற சொல்லோ மூங்கில், பூவுலகம், அரிசி அளக்கும் கருவி, ஓலைச்சுவடியின் மேலுள்ள சிப்பு, ஒழுங்காகப் படிய்வைத்தல், நூலைப் படித்தல் என ஆறுவகையில் பொருள் பாடும்.

நான்கு புறத்தினின்று வீசும் காற்றுக்கும் நான்கு பெயர்களைத் தமிழ் தந்திருக்கிறது. கீழ்க்காற்றைக் கொண்டல் என்றும் மேல் காற்றைக் கோடை என்றும் தென்காற்றைத் தென்றல் என்றும், வடகாற்றை வாடை என்றும் அது சொல்கிறது. ''கொண்டலொடு புகுந்து''; ''கோடையொடு புகுந்து'', ''தென்னவன் பொதியிற் தென்றல்'' காரரசாளன் வாடையொடு வருஉம்'' என்று இந்நான்கு பெயர்களும் சிலப்பதிகாரத்திலும் வருகின்றன.

தமிழில் இலைக்கு எத்தனைப் பெயர்கள்! பூவுக்கு எத்தனைப் பெயர்கள்! காய்க்கு எத்தனைப் பெயர்கள்! பழத்தோலுக்கும்தான் எத்தனைப் பெயர்கள்! மா, வாழை முதலியவற்றின் இலையை 'இலை' என்றும், நெல், கேழ்வரகு முதலியவற்றின் இலையைத் 'தாள்' என்றும், சோளத்தின் இலையைத் 'தோகை' என்றும், தென்னை, பனை ஆகியவற்றின் இலையை 'ஓலை' என்றும், பல பெயர்களால் வழங்கும் அழகு தமிழுக்கே உள்ள சிறப்பன்றோ? பூவின் முதல் தோற்றத்தை அரும்பு என்றும், அதன் அடுத்த நிலையைப் பேரரும்பு என்றும் போது என்றும், மலர்ந்த நிலையை மலர் என்றும், பூத்தநிலையைப் பூ என்றும், செடியினின்று விழுந்துவிட்ட நிலையில் அதனை வீ என்றும், வாடிய நிலையில் அதனைச் செம்மல் என்றும் சொல்லிவரும் பெற்றியையும் தமிழ்மொழி தானே பெற்றுள்ளது? காயையும் அதன் நிலைக்கேற்ப பிஞ்சு, அரைக்காய், பழக்காய், கருக்காய் என்று வகைப்படுத்திக் கூறுவதோடு மாப்பிஞ்சை வடு என்றும், பலாப்பிஞ்சை மூசு என்றும் சொல்லும் மரபும் தமிழ்மரபுதானே? பழத்தின்தோலைக் குறிப்பதற்குக்கூடத் தோல், தோடு, ஓடு, சிரட்டை என்று பல பெயர்கள் தமிழில் உள்ளனவே!

இவ்வளவு சொல்வளமுள்ள மொழியில் பிறமொழிச் சொற்கள் வந்து கலக்க இடம்தருவதும் தரவேண்டும் என்று சொல்வதும் அறிவுடைமையாகுமா? நம் விழிப்புணர்ச்சியின்மையால் தமிழில் வந்து கலந்துவிட்ட பிறமொழிச் சொற்களை விலக்க முயல்வதும் விலக்க வேண்டுமென்று சொல்வதும் அன்றோ அறிவுடைமையாகும்!

பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலப்பதைத் தொன்று தொட்டே நம் முன்னோர் எதிர்த்து வந்திருக்கிறார்கள். அப்படிக் கலந்தாலும் வடசொற்கள் என்றும் திசைச் சொற்கள் என்றும் அவற்றை வேறாகப் பிரித்தே சொல்லி வந்திருக்கிறார்கள். வேறு எம்மொழியிலேனும் பிறமொழிச் சொற்களை இப்படித் தனியாகப் பிரித்துச் சொல்லும் வழக்கம் இருக்கின்றதா?

மேலும் பிறமொழிக் கலப்புக்கு இடம் தந்ததால் நம் தமிழ்மொழி எவ்வாறெல்லாம் சிதைந்துபோக நேர்ந்தது என்பதையும் நாம் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும். தமிழில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்த கலப்பால் ஏற்பட்ட மொழிகள்தாமே தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலானவை? ஒருகாலத்தில் இந்தியப் பெருநாடு முழுவதும் பின்னர் தென்னிந்தியா முழுவதும் ஒரே மொழியா

கப் பரவியிருந்த தமிழ்மொழி இன்று இந்தியாவின் தென்மூலையாகிய ஒரு பகுதியில் மட்டுமே வழங்கும் மொழியாகச் சுருங்கிவிட்டது, தமிழில் வடமொழிக் கலப்புக்கு இடம்தந்ததால்தானே!

இதனை நன்குணர்ந்துதான் மறைமலையடிகள் போன்றோர் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தனர். பாரதிதாசன் போன்றோர் அதனை வளர்த்து வந்தனர். தமிழில் கலந்துவிட்ட வடமொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் விலக்கி அவற்றிற்கு நேரான தனித்தமிழ்ச் சொற்களை அவர்கள் கையாண்டு தந்தனர். அவர் தம் வழிநின்று இன்றும் தனித்தமிழ் இயக்கத்தை வளர்த்து வருவோர் பலராவார்.

இவ்வாறு தமிழில் கலந்து கிடக்கும் பிறமொழிச் சொற்களை நீக்கிக் கொண்டே வந்தால் தமிழ்மொழி வளர்ச்சி அடையாது என்று சொல்வதும் மற்றொரு தவறான கருத்தாகும். தமிழில் இன்று கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் எல்லாம் அவற்றிற்கு நிகரான தனித்தமிழ்ச் சொற்களைப் புறம் தள்ளிவிட்டுப் புகுந்தவையே அல்லாமல் புதிதாகத் தேவைப்பட்டவை அல்ல. புதிதாகத் தேவைபடும் சொற்களையும்தானே ஆக்கிக் கொளவல்ல பேராற்றல்பெற்ற மொழி தமிழ். எனவே பிறமொழிக் கலப்பு என்பது உயர்தனிச் செம்மொழியாகிய தமிழுக்கு வேண்டாத ஒன்று. அது தமிழ் தளர்ச்சியடையச் செய்யுமே தவிர, வளர்ச்சியடையச் செய்யாது. பிறமொழிச் சொற்களை நீக்கித் தமிழைத் தூய்மைப் படுத்துவதுதான் தமிழை வளர்க்கும்; வாழ்விக்கும்.

துருக்கி நாட்டைச் சீர்திருத்திய செம்மல் கமால்பாட்சா 'துருக்கியின் தந்தை' என்று போற்றப்படுபவர். அவர்காலத்தில் துருக்கிமொழியில் கலந்துகிடந்த அராபிய பாரசீக மொழிச் சொற்களோ 20,000க்கும மேற்பட்டவை. அவ்வளவு பிறமொழிச் சொற்களையும் விலக்கிவிட்டு 1,58,000 தனித்துருக்கிச் சொற்களைத் திரட்டி அவர்தம் தாய்மொழியைத் திருத்தி அமைத்தார். அதனால் துருக்கி மொழிக்கு எந்தக் குறையும் வந்துவிட வில்லை. மாறாகப் புத்துயிர்பெற்றுப் பொலிவுடன் தான் வளங்கி வருகின்றது. தூய்மைப் படுத்தப்பட்டதால் துருக்கி போன்ற பிற்காலத்து மொழியே வீழ்ச்சியடையாமல் வளர்ந்து வாழ்கிறது என்னும்போது, முதுபெரும் தனிமொழியாகிய-மொழிகளுக்

கெல்லாம் தாயாகிய தமிழ் தூய்மைப்- படுத்தப்படுவதால் வளர்ச்சி அடையாது என்று சொல்வது அறியாமையிலும் அறியாமை அன்றோ?

பிறநாட்டுச் சொற்களை அப்படியே நாம் ஒலிக்கவேண்டும் என்றும் பிறமொழி எழுத்துகளையும் அப்படியே பெயர்த்து எழுதவேண்டும் என்றும் கூடச் சிலர் சொல்லி வருகிறார்கள். இவையும் தவறான கருத்துகளே.

பிறநாட்டுச் சொற்களை எந்த நாட்டாரும் தம் தாய்மொழிக்கு ஏற்பவே ஒலிக்கிறார்கள்; எழுதுகிறார்கள். அவ்வாறு ஒலிப்பதும் எழுதுவதும்தான் நாகரிகமானது என்று கருதுகிறார்கள். ஆங்கிலேயர்கள் 'கட்டுமரம்' என்ற சொல்லைத் தம் மொழிக்கு ஏற்பக் 'கட்டமரான்' என்றுதான் சொல்கிறார்கள், எழுதுகிறார்களே தவிரக் கட்டுமரம் என்று சொல்வதுமில்லை. எழுதுவதுமில்லை. திருநெல்வேலியை 'டின்னவேலி' என்கிறார்கள். மிளகுத் தண்ணீரை 'மிலகுடானி' என்கிறார்கள். தமிழையும் 'டமில்' என்றுதான் சொல்கிறார்கள். 'Christ' என்ற ஆங்கிலச் சொல்லைச் சீனமக்கள் தங்கள் மொழிக்கு ஏற்ப 'கிலிசெது' என்றுதான் ஒலிப்பார்களாம். சப்பானியரோ அதனை தம் மொழிக்கேற்ப 'கிரிசெத்து' என்றுதான் சொல்வார்களாம். தமிழர்களாகிய நாமும் அப்படியே நம்மொழிக்கு ஏற்ப அதனைக் 'கிறித்து' என்றுதானே சொல்லவேண்டும்? France என்பதைப் 'பிரான்சு' என்றும் Paris என்பதைப் 'பாரிசு' என்றும், 'Russia' என்பதை 'உருசியா' என்றும் Moscow என்பதை 'மாசுகோ' என்றும் Japan என்பதைச் 'சப்பான் என்றும், Holland என்பதை 'ஆலந்து' என்றும் Henry என்பதை 'என்றி' என்றும் எழுதுவதும் ஒலிப்பதும் தானே சரியான முறை.

இதுவே சரியான முறையென்று தெரிந்துவிட்டால் தமிழில் வடமொழி எழுத்துகள் என்று சில எழுத்துகள் இருப்பது தேவைதான் என்று சொல்வது தவறான கருத்தே என்பது புலப்படும். தமிழ்ச் சொற்களில் தமிழ் எழுத்துகள் தாம் அமைகின்ற முறையிலேயே வடமொழி எழுத்துகளின் ஒலிநய இயல்பாகத் தருகின்றபோது வடமொழி எழுத்துகள்வேறு தேவைதானா? இஞ்சி, மஞ்சள், பஞ்சு, அஞ்சல் என்னும் சொற்களில் 'ச' கரம் ஒலிக்கின்ற வகையும், காட்சி, மீட்சி, வறட்சி, புரட்சி என்னும் சொற்களில் 'ச' கரம் ஒலிக்கின்ற வகையும் வேறு வேறானவை அன்றோ? காசு, மாசு, தூசு, பேசு

என்னும் சொற்களில் 'ச' கரம் ஒலிக்கின்ற வகைமுன் குறிப்பிட்ட இருவகையினும் மாறுபட்டதன்றோ?

இவ்வளவு சிறப்பும் ஆற்றலுமுடைய ஒரு மொழிக்குப் பிறமொழியில் உள்ள ஒலிகளோ எழுத்துக்களோ சொற்களோ தேவையென்று சொல்வது எவ்வளவு தவறானது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். காலஞ்சென்ற தமிழறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் அவர்கள் கூறியுள்ளபடி, "எவ்வகைப் பேச்சொலிக்கும் அடிப்படையாய முதல் எழுத்தொலிகளும் சார்பொலிகளும் தமிழின் கண்ணேயே பண்டைத் தமிழ்ப் பேரறிஞரால் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. தமிழ் எழுத்துகளைக்கொண்டே உலகின் கண்ணுள்ள எல்லா மொழிச் சொற்களையும் எழுதக்கூடும். எல்லா மொழிக்கும் பொதுவாய வரிவடிவை அமைப்பதற்குத் தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவே உறுதியான அடிப்படை" என்பதைத் தமிழர்களாகிய நாம் நன்கு உணரவேண்டும். உணர்ந்து தமிழில் பிறமொழிச் சொற்களோ எழுத்துகளோ வந்து கலக்க இடம் தராமல் இருக்கவேண்டும். O

ஆசிரியர்:
மன்னர் மன்னன்

O பாவேந்தர் பாடிய 'குயில்' பாவேந்தரைப் பாடுகிறது!
O 'நினைவு மண்டபம்' படியுங்கள்!

தனி இதழ் 75 காசு.
ஆண்டுக் கட்டணம் 10 உருபா.

பாரதிதாசன் குயில்,
புதுச்சேரி-1.

பாவேந்தர் கண்ட அழகு

-உணர்வுப்பித்தன், விராலிமலை.

உலக மாந்தருள் பலருக்கு அழகற்றதாகக் காணப்படுவனவெல்லாம் பாவலன் கண்ணுக்கு அழகுடையனவாகக் காட்சிதரும். அவ்வழகைக் கண்டு கண்டு களிப்புற்ற பாவலன் தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டுமென்ற பெருவேட்கை கொண்டு வகுத்துக் கொடுத்தலே பாடலாகும். எனவேதான் பண்டையப் பாவலர்கள் பாடிய கழக இலக்கியங்களில் இயற்கை இடம் பெற்றுள்ளது. அவ்வியற்கையில் தம்மைத் தோய்த்துக் கொண்ட புலவர்கள் கண்ட அழகை உலகியல் நெறிகளிலும் ஒழுக்கங்களிலும் இணைத்து இயற்கையைப் பாடியுள்ளனர். அதன் பிறகு இடைக்காலத்தே தோன்றிய இலக்கியங்களில் ஒருசில தவிர பெரும்பான்மையன இலக்கிய வரிசையினின்று ஒதுங்கி நிற்கின்றன. இவ்வாறு இருத்தற்குக் கரணியம் யாதோவெனின், புலவர்களுக்கு இயற்கையின் ஈடுபாடு குறைந்தமையால் பொருட் சுவையின்றிச் சொற்சுவையோடு மட்டுமே பாடல்கள் மிளிரத் தொடங்கியதே கரணியம் எனின் வெள்ளிடைமலை. இவ்வாறிருக்கையில் பண்டைய பாநலனை மீண்டும் கொணர்வதற்கே பாவேந்தர் 'எழுந்தருளினார்' எனின் மிகையன்று.

அறிவியல் வளர்ச்சி எனும் பெயரில் மிடுக்கும் நாகரிக முதிர்ச்சி எனும் பெயரில் மினுக்கும் மலிந்து ஆடை அணிகலன்களின் புனைவில் போலி ஒப்பனையில் அழகைக் கண்டுகளிக்க வேணவாக் கொண்டலையும் மாந்தர் பலர் நிறைந்த இவ்விருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பாவேந்தர் பாரதிதாசனார், எங்கெங்கும் காணும் இயற்கை எழில் விளையாட்டில் படைப்பில் அழகைக் கண்டு அருந்தமிழில் பாடிய பாடல்களைப் படிக்குந்தோறும் நெஞ்சத்தை யள்ளும் சுவைகள் பல நிறைந்துள்ளன என்பதை விளம்பவும் வேண்டுமோ? கீரியின் உடல் வண்ணம்போல் மணல்மெத்தை யிட்டலையும் கடற்பரப்பிலும், அண்டங்கள் கோடி கோடி அனைத்தையும் தன்னகத்தே கொண்ட ஒரு பெரும் புறத்தில் கூத்திடுகின்ற தென்றற் காற்றிலும், மாடிவீடு ஒன்றுமில்லா மரங்களடர்ந்த காடுகளிலும், தங்கத்தை உருக்கிவிட்ட வானோடை தன்னில் ஒரு செங்கதிர் மாணிக்கத்துச் செழும் பவளம் முழுகும் மாலை செங்குத்தாய் உயர்ந்த குன்றிலும், பேரரிமா அறைய வீழும் யானைபோல் பெருகிப் பாய்ந்துவரும் வெள்ளம் மோதலாலே மணற்கரை இடிந்துவீழும் ஆற்றிலும், கண்ணாடித் தரையின் மீது

கண்கவர் பச்சைத் தட்டில் எண்ணுத ஒளிமுத்துகள் இறைந்தது போல் குளத்துத் தண்ணீரில் படர்ந்த இலைகளிலும், தாமரைகளிலும், கடலிலே கோடி கோடி கதிர்க்கைகள் ஊன்றுகின்ற ஞாயிற்றிலும், விண்மீன்கள் மின்னுகின்ற விரிவானிலும். ஆயிரங் கிளைகள்கொண்ட ஆலமரத்திலும், ஒருபெட்டை தன் ஆணன்றி வேறொன்றுக்கு உடன் படாத புருக்களிலும், கள்ளரை வெளிப்படுத்தும் காரிருளிலும், 'முன் செய்த கூழுக்குத்தான் முடக்கத்தான் துவையல் என ஒலிக்கும் பெண் டிர் நிறைந்த சிற்றூரிலும், 'எத்தனை வகைத் தெருக்கள் என்னென்ன வகை இல்லங்கள்' என வியத்தற்குரிய பட்டணங்களிலும், வடக்கி னில் தமிழர் வாழ்வை வதக்கிப்பின் தெற்கில் வந்தே இடக்கினைச் செய நினைத்த எதிரியை அந்நாள் தொட்டே அடக்கடா என்றுரைத்த அறங்காக்குந் தமிழிலும் அழகைக்கண்டு களிப்புற்றுக் கன்னல் தமி ழில் பாவேந்தர் பாடிய பாடல்கள் பலப்பல.

ஒருநாள், மாணிக்கச் சுடர் மேற்றிசையில் இலங்குகின்ற மாலை நேரத்தில் கடலின் எழிலைக்காண வீட்டினின்று புறப்பட்டார். செல் லும் வழியில் பள்ளி மாணவர்கள் பள்ளியைவிட்டு வெளியேறிப் பாடி யாடிக் குதித்து ஓடுகின்ற நிலையைக்கண்டு களித்துக் கடற்கரையை நோக்கிச் சென்ருர். கடற்கரையின் அருகில் திட்டுத் திட்டாகக் குவிந் தும் பரந்தும் கிடந்த வெள்ளிய மணற்பரப்பையும் அதன்மேல் கோடிற்றுக் கிடந்த கீற்றுகளையும் அதன்மேல் கடலினின்று எழு கின்ற அலைகளின் மோதலையும் கண்ணுற்ற பாவேந்தர் கீழ்வரும் பாடலை நமக்கு வடித்துத் தருகின்ருர்.

அதனை

''ஊருக்குக் கிழக்கே யுள்ள
பெருங்கடல் ஓர மெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல்மெத்தை; அம்மெத் தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பாய் ஏறும்; வீழும்!
புரண்டிடும்; பாராய் தம்பி''

எனும் பாடல் விளம்பும்.

மற்றொரு நாள் மாலை நேரத்தில் குளிர்ந்த மலர்களின் மணம் தென்றலில் அசைந்து வரவே சோலையின் அழகை அள்ளிப்பருகச்

சோலையின் பக்கம் சென்றார். சென்றவர், சோலையின் நடுவில் பச்சைப் பசேலெனப் படர்ந்துகிடந்த முல்லைக்கொடியைக் கண்டார். அம் முல்லைக் கொடியில் முத்தொளி வீசும் மதிபோல் வெள்ளிய முல்லை மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசிக்கொண்டிருந்ததைத் தன்னிரு கண்களால் கண்டு களிப்புற்றார். அதனை.

"மாலைப் போது சோலையின் பக்கம்
சென்றேன்; குளிர்ந்த தென்றல் வந்தது.
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த வசத்தில் திருப்பினேன்
சோலைநடுவில் சொக்குப் பச்சை
பட்டுடை பூண்டு படுத்துக் கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே!"

என நம்முன் ஓவியம் தீட்டுகின்றார்.

இன்னொரு நாள் மேற்றிசையில் செழும்பரிதி செவ்வானத்தே மறைய, வில்லடித்த பஞ்சின் பால்நிறத்தையும், விட்டெறிந்த தட்டின் உருவத்தையும், முல்லை மலர்க் குவியலையும், முத்தொளியின வட்டத்தையும் போன்று இலங்குகின்ற இரவுப் பெண்ணாகிய நிலவு உலா வருகின்ற நேரத்தில் குன்றம் நோக்கிச் சென்றார் செல்லுங்கால் நீல வானின் விரிவையும் அதில் மின்னுகின்ற விண்மீன்களின் அழகையும் கண்டு களித்தவர் உலகியல் மாந்தரோடு ஒப்பிட்டு,

"மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்; உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்இ தைத்தன்
கண்மீதில் பகலி வெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!,'

என்று பாடியுள்ளார்.

"அருவிகள் ஒளிவீசுகின்ற மாணிக்க மாலைகள், குருவிகள் தங்கக் கட்டிகள், குளிர்மலர்கள் மணியின்குப்பை, எருதின்மேற் பாயும் வேங்கை, நிலவுமேல் எழுகின்ற மின்னல், சருகெலாம் ஒளிசேர் தங்கத் தகடுகள்" என்று குன்றக்குவட்டின் எழிலும், இன்னும் இது போன்று இயற்கையில் பாவேந்தர் அழகைக்கண்டு களித்து பாடிய பாடல்களும் மிகப்பல அவற்றையெல்லாம் 'அழகின் சிரிப்பு' எனும் இலக்கியத்தில் விரிவாய்க் காணலாம். ❂

"பிரிந்திடப் போகிறேன்"

இரா. இளவரசு

இந்தக் கொடுமை என்றுதான் தீருமோ?
ஏ, என் தோழி! இனியென்ன நேருமோ? (இந்தக்)

அன்றுநான் பிறந்ததும் அழிந்திருந் தாலோ
அன்னையென் கருவை அழித்திருந் தாலோ
என்றும்நான் குழந்தையாய் இருந்திருந் தாலோ
என்னுயிர்த் தின்னுமித் தொல்லையோ இல்லை (இந்தக்)

உடலின் சுமையாய் உறுப்புகள் மீறின!
உள்ளச் சுமையாய் நினைவுகள் ஊறின!
தடிமர மாநான்? நெஞ்செனக் கில்லையா?
சந்தையின் மாடாய் வந்தெனைப் பார்க்கும் (இந்தக்)

ஈராண் டாக எத்தனைப் பேர்கள்
'இந்த' ஊர் 'அந்த' ஊர் என்றுவந் தார்கள்!
நேரே அவர்முன் நில்லெனச் சொல்லினர்!
நின்றேன் கண்டனர்; நினைத்தேன் மறந்தனர்! (இந்தக்)

உற்றுப் பார்த்தனர் ஒருசிலர்! எனைப்போல்
ஓர விழியாற் பார்த்தனர் ஒருசிலர்!
சற்றும் அழகிலா நான்குபேர் வந்தனர்!
தகுந்தவர் சிலரும் வந்தெனைத் தள்ளினர்! (இந்தக்)

கண்ணுக் கினியரைக் கண்டபிற் பாடு
கட்டினேன் வானிலே கற்பனை வீடு!
பெண்ணுக் கொருமனம் எதற்கடி தோழி?
பிறர்கைப் பாவையாய்ப் பெண்ணிருக் கின்ற (இந்தக்)

இத்தனை ஆயிரம் எண்ணிவைத் தால்தான்
ஏற்கலாம் பெண்ணை என்றன ராம்சிலர்!
ஒத்துவ ரவில்லை பிறப்பெலாம் என்றே
உதறின ராம்சிலர்! உலகமா ஈது? (இந்தக்)

முக்கும் விழியும் பூக்களென் றுயே!
முற்றிய அழகின் தேக்கமென் றுயே!
நோக்கடி! இவ்வெழில் யார்க்கடி வேண்டும்?
நொள்ளேப் பணமன்றே கொள்ளேயாய் வேண்டும்!
(இந்தக்)

பண்பை எவனடி பார்க்கிறுன் நன்று?
பணத்தை யல்லவோ கேட்கிறுன் இன்று!
துன்பாம் துன்பம் படித்தவன் பெரிய
தொகையெதிர் பார்த்தல்! தொடர்கதை யான (இந்தக்)

ஏழையென் தந்தை, தங்கையர் இருவர்
எப்படிப் பெரும்பொருள் கொடுத்திட இயலும்?
கோழைகள் பெண்ணினும் பொருளேயே குறியாயக்
கொள்கையில் நாம் செயக் கூடுவ தென்ன? (இந்தக்)

ஏழைக்கு மகவாய் எதற்கடி பெண்கள்?
இறைவன் படைப்பில் ஏதடி நேர்மை?
பீழை உலகில் வாழ்ந்திட வோநான்?
பிரிந்திடப் போகிறேன; வருந்தா தே!நீ! (இந்தக்)

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
ஆண்டுக்கட்டணம்	9 உருபா	10-50	13 உருபா.
தனி இதழ்	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லே.

ஓரிதழுக்கு ஒன்றரை உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனேயாளர்கள் எழுதிக் கேட்க.

பாரதிதாசன் உலகப் பெரும்பாவலன்

-வீ. இரா. சந்திரன்.

பாவலர்கள் விரிந்த வானத்திலே சிறகடித்துப் பறந்து இனிய பாட்டிசைக்கும் வண்ணப் பறவைகள். குலம், சமயம், மொழி, இனம், ஆகிய எல்லைகளையெல்லாம் கடந்து, 'மாந்தக்குலம்' எங்கெங்கெல்லாம் உள்ளதோ, அங்கெல்லாம் தமது குரல் ஒலிக்கவேண்டும் என்ற பேராவல் அவர்களுக்கு உண்டு. கால வெள்ளத்தாலும் கரைந்து போகாதமாமலர்களின் இன்பமணமாக நிறைந்திருப்பவர்கள் அவர்கள். குமுகாயத்தின் எழுச்சிக்கும், பெருமைக்கும் அவர்களே பெரும் காரணமாவார்கள். அந்த இனிய பண்ணிசைத்திடும் பாக்குயில்களை ஒரு சிறு கூண்டிலே அடைத்து விடுவதென்பது இயலாதது. ஏனென்றால், 'பாவலர்கள் உலகின் கட்டுப்பாடுகளுக்கு அடங்காத தனி மாந்தர்கள்.

உலகம் செய்த பெருந்தவத்தால் தமிழ் மண்ணிலே எத்தனையோ பாவலர்கள் தோன்றியுள்ளனர். ஆயின், மாந்த இனத்தின் முழுக் கவனத்தையும் கவர்ந்த பெருமை பாரதியையும் சாரும்; பாரதிதாசனையும் சாரும். பாரதியும், பாரதிதாசனும் தமிழன்னையின் இருவிழிகள். முன்னவர் நாட்டாண்மையின் முன்னோடி; பின்னவர் தீநெறியைத் துளைத்திட்ட எரியீட்டி. இவர்கள் இருவரிடையேயும் அன்பு நிலவியது; பற்று முகிழ்த்திருந்தது; உண்மை சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டிருந்தது. பாரதி விட்டுச்சென்றதைப்பாரதிதாசன் தொடர்ந்து நடத்தினார். 'நாட்டு விடுதலை' பாரதியின் உயிர்மூச்சாக இருந்தது. 'மாந்த மேம்பாடு' பாரதிதாசனின் கொள்கையாக இருந்தது.

மூத்தவர் பாரதி 'மென்மையான' மொழிகளால் அறிவுரைகள் வழங்கினார். இளையவர் பாரதிதாசனோ 'எழுச்சிவுரை'களால் உள்ளமற்றோரைத் துளைத்துக் காட்டினார். இருவருமே சீரிய பெரும்பணிகளையாற்றியவர்கள். ஆனால் பாரதியைத் தமிழகம் அறிந்து வைத்திருக்கின்ற அளவிற்கு அவரின் அன்புமாணவராகிய பாரதிதாசனைத் தமிழகம் அறிந்து வைத்திருக்க வில்லை என்பது உண்மைதான். அதற்குக் காரணம், நாடு விடுதலை பெற்றதும், பாரதியின் பெருமையையே சிறப்புகளையே மக்கள் பேசிக்கொண்டிருந்தனர். அன்று இருந்த தாளிகைகள் பலவும் பாரதியின் பாவாற்றலையே எடுத்தியம்பின. ஒரு பெரிய நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட பாவலன் என்றவகையில்

பாரதி உலகத்தின் கவனத்தைக் கவர்ந்து கொண்டிருந்தார். ஆனால் பாரதிதாசனை ஒரு சிறு கூட்டிலே அடைத்திடும் முயற்சிகளில் சிலர் தொடர்ந்து ஈடுபட்டு, அதிலே வெற்றியும் பெற்றதனால் அவரின் புகழ் நாடு முழுவதும் பரவ வகையில்லாமல் போயிற்று. அந்தப் பாவலனின் இசை, உலகினர் அனைவரின் செவிகளிலும் எதிரொலிக்க இயலாது போயிற்று. ஆயின், இதனுலெல்லாம் பாரதிதாசன் சிறப்பிழந்தவர் என்றோ. உலகினரின் புகழுரைகளுக்குத் த தகுதியற்றவர் என்றோ கருதுவது பேதைமை.

எந்தப் பாவலனுக்கும் மொழிப்பற்று இருக்கும். தன் தாய் மொழியை அவன் சிறப்பித்தே கூறுவான். இதனால் அவனைப் பிறமொழிகளின் பகைவனுகக் காட்ட முயல்வது அறியாமை. பாரதிதாசனைச் சிறப்பிப்பதாக நினைந்து, அந்த உலகப் பெரும் பாவலனை, ஒரு சிறு எல்லையிலே நிறுத்தி விட்டனர், குள்ளமனத்தினர் சிலர். பாரதிதாசனின் சிறப்பை உலகம் உணராமல் போனதற்கு அவர்களே குற்றவாளிகள். அந்தப் பெரும் பாவலனின் பாக்களால் அன்று வளர்ந்தவர்கள் பலர். இன்று உதட்டளவிலே 'பாரதிதாசனின்' புகழ்பாடும் அரசியல் வேட்டைக்காரர்கள் சிலர், அன்று உள்ளத்திலே அந்தப் பாவலனின் வீழ்ச்சிக்கு விதை விதைத்தவர்களாவர்.

ஒரு பாவலனின் உள்ளத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அவன் யாத்த பாடல்களிலே மூழ்கிட வேண்டும். அவன் வடித்த எல்லாப் பாடல்களிலுமே அவன் உள்ளம் பளிச்சிடுவதில்லை. சில பாடல்களில் அல்லது ஒரே ஒரு பாட்டில் மட்டுமே அவன் 'மனம்' திறந்து பேசியிருப்பான். பாவலனின் உள்ளத்தை உணர விழைவோர் அதனையே தேடிப்பிடிப்பதில் ஆர்வம் காட்டிட வேண்டும்.

'தமிழன் அன்று அப்படி வாழ்ந்தான்; இப்படி வாழ்ந்தான்' என்று புலம்பித் திரிவது மட்டும் பயனற்ற வீண் புலம்பல்! 'தமிழன் இன்று இப்படி வாழ்கிறான்' என்று உள்ளம் நொந்து உண்மையை உரைப்பது மனம். 'அவன் எதிர்காலத்தில் இப்படி வாழ வேண்டும்' எனச் சுட்டிக்காட்டுவது அறிவுடைமை.

பாரதிதாசன் இந்தப் பெரும்பணியைச் செய்திருக்கிருர். தமிழனின் சிறுமைகள் அந்தப் புரட்சிப் பாவலனைப் பெரிதும் வதைத்திருக்கவேண்டும்; அவன் விலங்கினும் இழிந்தவனுய்-பேடியாய்-கோழையாய்-மானத்தை இழந்தவனுய்-தன்மதிப்பு அற்றவனுய்-இரண்டகத்திற்குத் தோழனுய்-பித்தலாட்டத்திற்குத் துணைவனுய்-பொய்மையின் பன்னனுய் நலிந்து, மெலிந்து, புழுவைப் போல் நெளிந்து கொண்டிருப்பதை அவர் கண்டிக்க வேண்டும். அந்தக் காட்சி அவரது புரட்சியுள்ளத்தைத் தட்டியிருக்கவேண்டும்; அந்த உலகப் பெரும் பாவலனின் மீசை துடித்திருக்கவேண்டும்; பற்கள் நறநறவென்று ஒலியை எழுப்பியிருக்கவேண்டும்; கையிலே எழுதுகோலே எடுத்தார். வரைந்தார்.

பாடல் பிறக்கவில்லை-புரட்சி எரிமலே வெடிக்கத் தொடங்கியது!

'தமில் வால்க! தமில் வால்க!' ஒரு தமிழர் கூட்டம் இப்படி முழங்குகிறது

"வாழ்க! வாழ்க! ஒழிக! ஒழிக!" இப்படியும் சில முழக்கங்கள் எழுகின்றன.

'உயிர் தமிழிற்கு! உடல் மண்ணிற்கு!'
இப்படி எழுதிவைத்துவிட்டுச் சில தமிழிளைஞர்கள் தங்களை தீக்கு இரையாக்கிக் கொள்கின்றனர்.

'தமிழ்காக்க உயிர்நீத்த செல்வ மகனைக் காணீர்! எமக்கே உமது ஒப்போலைகளைத் தாரீர்!'

பிணத்திலே விழுந்து புரளும் சில மலிவான அரசியல்காரர்கள் மேடைகளில் முழங்குகின்றனர்.

'வாழ்க! வாழ்க! தலைவர் வாழ்க!'—மீண்டும் முழக்கங்கள்—வெறிக் கூச்சல்கள்.

அப்படிக் கூச்சலிடுவோர் யார்?
அரசியல்காரர்களைப் போலவோ, தலைவர்களைப் போலவோ பணத்திலே புரளும் நலம் விரும்பிகளா? மேடைகளிலே முழங்கிவிட்டு, இயங்கிகளில் உலாவரும் செல்வர்களா?

ஊருக்கெல்லாம் 'கருப்பத்தடை' அறிவுரை செய்துவிட்டுத் தமது மக்களுக்கு இளம் அகவையிலேயே தமது குலத்திலேயே

மணமுடித்து-வைக்கும் சூழற்கடிமைப்படும் கழுகுகளா? யார் அவர்கள்?

ஆமாம். யார் அவர்கள்?

'வாழ்க! வாழ்க! என்று வாய்வலிக்க முழங்கித் தீர்க்கும் அந்தப் பித்தர்கள் யார்? காலமெல்லாம் கயவர்களின் கால்களுக்குச் செருப்புக்களாய் இருந்துவிட்டுப் புழுதியிலே புரண்டு கொண்டிருக்கும் அந்தப் புழுக்கள் யார்? புன்மைத் தேரைகள் யார்?... அவர்கள் யாரா?

அவர்கள்தாம் தமிழர்கள்—கல்தோன்றி மண்தோன்ருக் காலத்து முன்தோன்றிய மூத்த குடியினர்-பனிமலையிற் கொடி பொறித்து, கனகவிசயர் தலையிலே கல்லை ஏற்றிக், கற்பரசி கண்ணகிக்குப் படிவம் அமைத்தானே ஒரு தமிழ்மன்னன் அவனுடைய வழித்தோன்றல்கள் அவர்கள்!

'அட இழிபிறவிகளே! நீங்களும் மாந்தர்களா? நீங்களும் தமிழர்களா? ஏ! தமிழினமே!... நீயும் ஓர் இனமா?...'

புரட்சிப் பாவலரின் உள்ளம் குமுறுகிறது! மீசை துடிக்கிறது! நம்மைப் பார்த்து-இல்லை-மாந்தப் பெருங்கடலின் சிறு அலையைப் பார்த்து அவர் உறுமுகிருர்:—

"பள்ளம் பறிப்பாய், பாதாளத்தின்
அடிப்புறம் நோக்கி அழுந்துக! அழுந்துக!
பள்ளந் தனில்விழும் பிள்ளைப் பூச்சியே!
தலையைத் தாழ்த்து! முகத்தைத் தாழ்த்து!
தோளையும் உதட்டையும் தொங்கவை! ஈன
உளத்தை, உடலை, உயிரைச் சுருக்கு!
நக்கிக்குடி! அதை நல்ல தென்றுசொல்!

இவ்வளவோடு பாவலர் நிற்கவில்லை; மீசையை முறுக்கிக் கொண்டே மேலும் கூறுகிருர் 'நம்மை'ப் பார்த்து!,

"தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்த நாயினுந்
தாழ்ந்துபோ! குனிந்து தரையைக் கௌவி
ஆமையைப் போல் அடங்கி ஒடுங்கு!
பொட்டுப்பூச்சியே. புன்மைத்தேரையே,"

பொறுக்க முடியவில்லையா?... பொறுத்துக் கொள்ளுங்கள். பாவலர் 'நம்மவர்'தான்! அவரா விடுவார்; இதோ தொடர்கிறார்.

"அழு! இளி! அஞ்சு! குனி! பிதற்று!
கன்னங்கருத்த இருட்டின் கறையே,
தொங்கும் நரம்பின் தூளே; இதைக்கேள்:"

சொற்களைக் கூரிய ஈட்டிகளாக்கி 'நம்மை' வாட்டியெடுத்த அந்தப் பாவலன் இன்னும் என்ன சொல்லப் போகிறான். எப்படியெல்லாம் வதைக்கப் போகிறான்?—என்று நாம் அஞ்சத் தேவையில்லை! அவன் நமக்கு நல்வழி காட்டுகிறான்; 'நாம் இனி என்ன செய்ய வேண்டும்' என்பதை விளக்கமாகக் கூறுகிறான்.

"மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து; சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
உன்வீடு-உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என் குலம்" என றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்து கொள்! உனைச் சங்கம மாக்கு!
மானிட சமுத்திரம் நாளென்று கூவு
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!

புகல்வேன்; ‘உடைமை மக்களுக்குப் பொது’
புவியை நடத்து; பொதுவில் நடத்து!
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!”

எரிமலை குமுறித் தணிந்ததுபோல்–கடல் அரற்றி ஓய்ந்ததுபோல் -புயல்சீறி அடங்கியதுபோல், பாவலரும் பாடி முடித்திருக்கிறார் அன்றோ?

பாரதிதாசன் உலகப் பாவலன் என்பதற்கும், மாந்தக் குலத்தை அவன் உளமார விரும்பிய பெரும் பாவலன் என்பதற்கும் இந்த ஒரு பாடலே போதுமன்றோ? பாவலர் அனைவருமே உயர்ந்தவர்கள். அவர்களுக்கு உயர்வு தாழ்வு இல்லை, பாவேந்தரின் பொதுவுடைமைப் பேச்சு இது.

“உன்வீடு – உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே ஏறு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை...
இதனைக் குள்ள மனிதர்க்கும் கூறுடா
தோழனே!”

இப்படிப்பட்ட பாவேந்தரைத்தான் தமிழகம் முறையாகப் புரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டது. இன்று பாவேந்தர் நம்மிடையே வாழவில்லை. ஆனால் அவர் விட்டுச் சென்ற பாடல் பெட்டகங்கள் காலம் உள்ளவரையிலும் வாழும் நிலைப்புரம் வாய்ந்தவை.

திரையிட்டு மூடியோ—சிறுமைக் கூட்டிலே அடைத்தோ அந்தப் பாமலர்களின் நறுமணத்தைச் சிதைத்துவிட முடியாது.

விற்பனையாளர்களுக்கு:

பட்டியல் நிலுவையுள்ள விற்பனையாளர்களுக்கு எக்காரணத்தை முன்னிட்டும் இதழ்கள் விடுக்கப்பெறா. தென்மொழியின் கூடுதல் கட்டணத்திற்கேற்ப விற்பனையாளர்கள் முன்பணத்தை விடுக்க வேண்டுகின்றோம்.

—அமைச்சர்

சிந்துவெளியும் திரவிடப் பண்பாடும்

வை. தட்சிணமூர்த்தி, மு. க. தமிழ்த்துறைத் தலைவர்,
சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை.

1. முன்னுரை: ''உலகில் நவிலப்பட்டும், எண்ணப்பட்டும் வந்த நல்லதைத் தெரிந்து கொள்வதே பண்பாடு''[1] என மாத்யூ ஆர்னல்டு அவர்கள் மொழிவார்கள். திரவிடப் பண்பாடென்பது இன்றைய தென்னிந்திய மக்களின் மூதாதையர்கள் தம் வாழ்வில் கொண்டிலங்கிய நற்பண்புகளேயாம். அப் பண்பாட்டை இன்றைய தமிழ் மற்றும் பிற திரவிடமொழி இலக்கியங்களிலும், திரவிட இனமக்களின் சமயக் கருத்துகளிலும் கண்டு தெளிய வேண்டும். இந்து சமயம் எனப்படும் அவியல் கொள்கையில் பெரும்பான்மையை திரவிடக் கொள்கைகள் இணைக்கப்பட்டுள்ளமையால், சிறிது இடர்ப்பாட்டுக் கிடையேதாம் இவற்றைத் தெளிய வேண்டியிருக்கின்றது. இரிக் மறையிலும் திருக்குறள் உரையிலும் பலகருத்துகள்மறுப்பனபோன்றும் வெறுப்பன போன்றும் குறிப்பிடப்படுகின்றன. இவற்றையும் துணைக்கொண்டு ஆராயலாம்.

2. திரவிடப் பண்பாட்டின் சில கூறுகள்: திரவிடர் சமயக் கொள்கையில் சிவன் முழுமுதற் கடவுளாக இடம் பெறுகிறார். அருவுருவ நிலையில் இறைவனைக் குறியாக வழிபடுவது மரபு. அவன், அவள், அது எனப்பகுக்கப்படுகின்ற ஆண், பெண், அஃறிணை வகைகளாலாகிய உலகில்[2] இறைவன் படைத்தும், காத்தும் அழித்தும் முத்தொழில் புரிகின்றான், திருஐந்தெழுத்தின் வடிவாகவும்இறைவனை உருவகித்து வணங்குகிறோம். இறை, உயிர், கட்டு (பசு, பதி, பாசம்) என்ற மூன்று நிலைகளில் உயிர் இறைத் தொடர்பு அடைகின்றது. உயிருக்கு மறுபிறப்பு உண்டு. இருவினை வயப்பட்டு அப்பிறவிகள் அமைகின்றன. சிவன் என்ற சொல்லுக்கே நன்மை, அறிவுநிலை, முத்தி என்பன பொருள்.[3] திருமூலர் திருமந்திரத்தில் இறைவனை அன்பே சிவம் என்று போற்றுகிறார்.[4] தேவார திருவாசகங்களில் பற்றுகளினின்றும்

1. Mathew Aanold, Literature on Dogma
2. சிவஞான போதம் முதல் நூற்பா.
3. கழகத் தமிழ்க் கையகராதி பக்கம் 170
4. திருமந்திரம் பாட்டு எண் 3059 திருப்பனந்தாள் பதிப்பு

சாதி, குலம், பிறப்பு, முதலிய தளைகளினின்றும் மாந்தனை விடுவிக்கும் ஆற்றல் இறைவனுக்கு உண்டு என நவிலப்படுகிறது.[5] தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கண நூலில் பிறமொழிச் சொற்களைத் தமிழில் வழங்கும் மரபு நவிலப்பட்டுள்ளது.[6] பண்டைத் திரவிடர் அன்பு ஒப்புரவு செய்து பிற இனத்தரோடு இயைந்து வாழ்ந்தவர் என்பதை இது காட்டும். முழுமுதற் கடவுள் வழிப்பாட்டோடின்றி ஊர்தோறும் இல்லந்தோறும் சிறு தெய்வ வழிபாடுகளும் விரவி இருந்தன. இல்லத்து வாழ்ந்த கற்புடைய மகளிரை இல்லுறை தெய்வமென வழிபடும் வழக்கு இன்றும் உண்டு. கழக இலக்கியத்தும் காணப்படுகிறது.[7] அரசனுக்குரிய காவல் மரங்களாய வேம்பு, ஆத்தி, பனை முதலிய மரங்களும், ஊர்கட்குரிய தனித்தனி மரங்களும் வழிபடப்பட்டன.[8] திருப்பாதிரிப்புலியூர், தில்லை முதலிய ஊர்கள் மரத்தின் பெயரால் பெயரிடப்பட்டன. கற்புடை மகளிர் பெருமையைக் கண்ணகி பாண்டியன் அவையில் பகர்கின்றாள்.[9] கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் எடுத்தான். சிற்றூர் தோறும் பொங்கல் விழாவையடுத்துக் கன்னியர் வழிபாடு என்ற பெயரால் ஏழு கன்னியரை வணங்கும் வழிபாடு இன்றும் இருந்து வருகின்றது. பெண்டிரும், வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோரும் வணங்கப்பட்டதைத் திருக்குறள் கூறுகின்றது.[10] நன்றியுள்ளத்தின் காரணமாகவும் அச்சத்தின் காரணமாகவும் விலங்குகளையும் பறவைகளையும் வழிபடும் மரபு பண்டு எல்லோரிடத்தும், இன்று வேடர், குறவர், மீனவர் போன்றோரிடத்தும் வளர்ந்துள்ளது. அன்பையும் இன்னுமையையும் அடிப்படையாகக் கொண்ட திரவிடர் பண்பாட்டைத் திருக்குறளின் வழி மேலும் தெளிபலாம். இதுகாறும் திரவிடப் பண்பாட்டின் கூறுகளைச் சிறிதுகண்டோம்.

---

5. திருவாசகம் பாட்டு எண் 477 தருமபுரம் பதிப்பு
6. தொல் சொல் 397.
7. புறம்: 23, 36, 57, 162, 336.
   மதுரைக் காஞ்சி: 153 பதிற்று: 5ஆம் பத்து பதிகம்
   சிலம்பு 27; 124-6
8. மதுரைக் காஞ்சி 164, 577–8, நெடுநல் 43 நச் உரை
   பட்டினப் 160
9. சிலப் வஞ்சினமாலை 1–34, 10 குறள். 50, 55

மேற்கண்ட வழிபாட்டு முறைகள் சிந்துவெளியில் இருந்துள் ளன. இனித் திராவிடர் தெய்வமாய சிவன் பற்றிய செய்தியைக் காண்போம்.

3. கொம்புமுடி சூடிய கடவுள்; மொசஞ்சதரோ வில் கண்டெடுக்கப்பட்ட 220[11] எண்ணுள்ள முத்திரையில் மூன்று முகங்களைக் கொண்ட மாந்த உருவம் ஒன்று கால்களை மடக்கி, இரு குதிகால்களும் ஒன்று சேர்ந்து காற் பெரு விரல்கள் கீழ்நோக்கி உள்ளவாறு இருக்கை யிட்டு ஓகத்தில் அமர்ந்து இருப்பது போல் காணப்படுகின்றது. மார்பில் முக்கோண வடிவில் கவசம் போன்றது காணப்படுகின் றது. கைகள் நிறைய வளைகள் பூணப்பட்டுள்ளன. இடுப்பில் இரட்டைப் பட்டையாக ஓர் அரைக் கச்சை காணப்படுகின்றது. இவ்வுருவத்தின் வலப்புறம் யானையும் புலியும், இடப்புறம் எரு தும் காண்டாவிலங்கும் நிற்கின்றன. உருவத்தின் தலைப்பாகை ஒன்றுள்ளது. சர்சான் மார்சல் அவர்கள் ஓகநிலை, மூன்று தலை கள் முதலியவற்றைக் கொண்டு மும்மூர்த்தியென்றும், இருபுற மும் விலங்குகள் இருப்பதால் உயிர், இறை (பசு, பதி) என்றும் குறித்து வரலாறு குறிக்கும் சிவனின் தோற்றமே இது என்றும் குறிப்பிடுகிறார்.[12] அரப்பாவில் ஆய்வின்போது பணியாற்றிய திரு. கே. என். சாத்திரி என்பார், இவ்வுருவத்தின் தலை மூன்று முகங்களையுடையதன்று என்று கூறுகிறார். மேலும் அவ்வுருவம் மாந்த வுருவமே அன்று; கொம்புகள் தலையில் இருப்பதால் தலை எருதென்றும், இருபுறமும் முகம் போன்று தோன்றுவன எருதின் காதுகள் என்றும், மாந்தஉதடு போன்று தோன்றும் பகுதி முகத்தில் பல் வடிவில் அணிந்த அணி என்றும், கைகளில் வளை கள் அணிந்திருப்பது போன்று தோன்றுவது மாந்தக் கைகளே அன்று யானையின் துதிக்கைகள் என்றும், உடம்பில் இடைக்குக் கீழே ஓகவிருக்கை முறையில் மடக்கியிருக்கும் கால்கள் கால்களே அன்று பாம்புகள் என்றும், அப் பாம்புகளின் கீழ்ப்பகுதியில்

11. Seal No. 420 E. Mackay Furthcr Excavations at Mohanjadaro Vol II
12. Sir Joen Marshal, Mohanjadaro and the Indus Vslley civilization

முறுக்கியிருப்பது போன்று தெரிவது இரு முதலைக் கண்கள் என்றும், அவ்வுருவம் தன் இருக்கையில் அமர்ந்திராது காற்றில் மிதப்பதுபோல் உள்ளதென்றும், மார்பில் கவசம் போன்று தெரிவது கவசம் அன்று; புலியின் உடலே என்றும், அவ்வுருவத்தின் தலைக்கொம்புகள் ஒரு கை முதலியவற்றை மட்டும் பார்க்கையில் தேளின் உருவம் தெரிகிறது என்றும், இருக்கையின் கால்கள் நண்டுகளைக் குறிப்பன என்றும் பலவாறு வண்ணிக்கின்றார். அவ்வுருவத்தின் தலையில் தலைப்பாகை போன்று தெரிவது அரசஇலைகளே என்றும் குறிப்பிடுகிறார்.[13] அவருடைய வாதத்தின் முடிவு "இக்கடவுள் சர் சான் மார்சல் கூறுவது போன்று சிவனின் முன் உருவம் அன்று; இரிக் வேதம் கூறும் உருத்திரனே"[14] என்பதேயாகும்; உடுவர்ட் பிக்காட், மார்டிம்மர் வீலர் உள்பட அனைவரும் சிந்துவெளி நாகரிக அழிவுக்கு இரிக் வேதம் பாடிய மக்களே காரணமாகலாம் என்று கூறுவதை மறுப்பதற்காகவே இவ்வறிஞர் இவ்வாறு ஒரு பீடிகை புனைந்தார். அவருடைய கூற்றில் இன்னும் ஒரு வியப்பும் உண்டு.

4. அரசமரக்கடவுள் (நான்முகன்); சிந்துவெளி வழிப்பாட்டு முறையில் "அஸ்வதா அதிஷ்தாத்ரி தேவதா" என வடமொழியில் மொழியப்பட்ட அரசமரமே முதற் கடவுளாக வழிப்படபட்டதென்றும் அக்கடவுட்குக் கீழ்ப்பட்டது இந்த எருதுத்தலைக்கடவுள் என்பதைக்காட்ட இரு கொம்புகட்கு மேல் அரசிலைக் கொத்துகள் இருப்பனபோல் தலைப்பாகை அமைந்துள்ளது என்றும் குறிப்பிடுகிறார். இவர் தம் கூற்றுக்குச் சான்றாக முத்திரை 430 (மொகஞ்சதரோ) முதலிய பல முத்திரைகளில் காணப்படும் மரவழிபாடு பற்றிய செய்திகளைத் துணைக்கொள்கிறார். இரிக் வேதத்தில் அரசமரத்தால் செய்த ஏனங்கள், வேள்விக்கு அரசமரக் குச்சிகள் முதலிபன உதவியன என்பது குறிக்கப்படுவதாலும் அரசமரம் நான்முகன் என்றும் வேத தெய்வத்தோடு தொடர்புடையதாலும் சிந்துவெளி மக்கள் முற்கால வேத நெறிக்காரரே என மெய்ப்பிக்க முயல்கின்றார். முத்திரை 430-இல் ஏழு பெண்கள் நிற்பதும் அவர்களது கூந்தல் தெரிவதும் கண்கூடு. அதனை இவர் கூந்த

13. K. N Sastri, New light on the Indus civilization Vol I p 11-12
14 Ibid page 12

லன்று, அரசமர 'இலைக் கொத்துகளை ஆண்களே அணிந்துள்ளனர் என்றும் அவர்தம் உடல்கள் மாந்தவுருவங்களாக அன்றிப் பறவை வடிவினவாகவுள்ளன என்றும் பகர்கின்றார்.[15] சிந்துவெளி முத்திரைகள் சிலவற்றில் தலை வியப்பான படைப்புகளாக, உடல் ஒரு விலங்கின் தலை மற்றொன்று ஆகவும்[16] ஒரே உடலில் மூன்று வெவ்வேறு உயிரினங்களில் தலைகள்[17] இருப்பவாகவும் அமைந்துள்ளன. அதனை மனத்துக்கொண்டு உயிரிறை முத்திரையும் பல விலங்குகளின் தொகுப்புருவமே என்று ஆசிரியர் வண்ணித்துவிட்டார்.

5. இம் முத்திரையின்[18] அளவு சற்றேறக்குறைய 1 25″ அகலமும் 1.37″ நீளமும இருக்கும். இந்த அளவில் நடுவில் இறைவனின் உருவமும், சுற்றிலும் காண்டாவிலங்கு, எருது, யானை, புலி, இருமான்கள் ஆகிய ஆறு உருவங்களும் மேற்புறத்தே ஆறு எழுத்துகளும் செதுக்கப்பட்டுள்ளன. சிறிய உருவங்களில் வெளிப்படையாகத் தெரிய வேண்டியவற்றைத் தவிர, பிறவற்றைச் செதுக்குவது எளிதன்று. உருவத்தின் தலைப்பகுதி மிகத் தெளிவாகவுள்ளது. ஐயத்திற்கிடமின்றி இருமருங்கும் கொம்புகள் உள. கொம்புகட்கு மேலேயுள்ள தலைப்பாகையில் இருமருங்குமாகப் பக்கத்துக்கு நான்கு கோடுகள் வெளிப்புற நக வளைவு போன்று சென்று தலைப்பாகையை அமைத்துள்ளன. மிகத் தெளிவாகத் தெரியும் இத் தலைப் பகுதியில் யாராலும் அரசிலைக் கொத்துகள் இருப்பதைக் காணமுடியாது. நம் ஆசிரியர் இதனோடு தொடர்பற்ற இன்னொரு முத்திரையில்[19] (சான் மார்சல். மொகஞ்சதரோ 387) "இரு கொம்புகட்கு மேல் அரசிலைக் கொத்துகள் இருப்பதைக் காட்டி அதுபோல் தான் இதுவும் இருக்க வேண்டும்"[20] என்று குறிப்பிடுவது பொருந்தாக் கூற்றாக இருக்கின்றது. கவசம் போன்ற மார்புப் பகுதியைப் புலியுடல் என்று கூறினார்கள், மொகஞ்சதரோ முத்திரைகளில் புலி பல முத்திரைகளில் காணப்படுகிறது.[21] புலியின் உடலில் உள்ள கோடுகள் நேர்கோடுகளாக இல்லாது சற்று

15. Ibid page 16
16. E Mackay further Excavation at Mohanjadaro Seals. 24, 673, 641, 521, 494, 554, 463:
17. Seals 494, 24 18. Seal. 420
19. Sir J. Marshal. Seal No. 367;
20. K. N. Sastri Vol I p 8.
21. E. Mackay Seals 75, 86, 122, 259, 260, 283, 360.

வளைந்திருக்கும். இம்முத்திரையில் மையஉருவமாகவுள்ள இதில் கவசப் பகுதி புலியின் உடலாக இருந்தால் வளைவுகள் காட்டப்பட்டிருக்கும். எனவே புலியுடல் என்று கருத வாய்ப்பில்லை. தலையில் உள்ள கொம்பு களை மனத்தில் வைத்துக்கொண்டு ஒரு கையை மட்டும் சேர்த்துப் பார்த்தால் தேள் என்று சொல்கிறார்.[22] சிவனில் நரனைக் காணல் போன்றுதான இஃது இருக்கிறது. கால்கட்கு மாறாகப் பாம்பென்று கூறுவது தெரியவில்லை. முத்திரையில் மாந்த உருவத்தின் இடைக்குக் கீழான பகுதிக்கு அதைச் செதுக்கிய கலைஞர் சிறப்புத் தரவில்லை. வேலைப்பாடும் கீழ்பகுதியில் குறைவு. கால்களைக் கோடுகளாகக் காட் டியதை மனத்தகத்து வைத்துப் பாம்பென்று கொள்ள வழியில்லை. மூதலைக்கண் தெரிவதாகச் சொல்வது நினைக்கக்கூட முடியாத கற்பனை யாக விருக்கிறது. கைகளை யானைத் துதிக்கை என்றனரே என்பதை யொட்டி, மொகஞ்சதரோ முத்திரைகளில் (172, 245, 304, 278, 512, 648) உள்ள யானையில் துதிக்கைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கை யில் ஒற்றுமை தெரியவில்லை. துதிக்கையின் வளைவே அங்கு இல்லை. மேலும் இடையே பெரும் வளையங்கள் அணிந்திருப்பதைக்காண மாந்தக் கைகளே என முடிவு செய்ய வேண்டியுள்ளது. மேலும் மாந்த உருவத்தைக் காட்டும் முத்திரைகளில் உள்ள கைகளோடு இக் கைகள் ஒத்துள்ளன. முடிவாக திரு. கே. என். சாத்திரி அவர்களின் கூற்று எவ்வகையிலும் பொருந்துவதாகத் தெரியவில்லை. சர். சான் மார்சலின் கூற்றை மறுப்பதற்கும் அடிப்படை கிடைக்கவில்லை. புதிதாகச் சில எண்ணங்கள் எனக்குத் தோன்றுகின்றன. சிவஞான போத நூற் பாவில் அவன், அவள், அது என்ற உலகப் பகுப்பு கூறப்படுகிறது.[23] அது என்ற அஃறிணை சுற்றியிருந்த விலங்குகளைக் குறிக்க, அவன் என்பது முழு முதலாய இறைவனைக் குறிக்க அவள் என்பதைக் கை வளையல்கள் குறிப்பதாகக் கூறினால் பொருந்தும் எனக்கருதுகிறேன். மாதொரு பாகர் மெய்ம்மை இதிலும் காணப்படுகிறது. எனலாம். தமிழ கத்தில் "அவர் என்ன கொம்பு முளைத்தவரோ" என்று வினவும் வினு முறை உள்ளது. கொம்பு முளைத்தவர் என்றால் செயற்கரிய செய்பவர் அல்லது மாந்தர்க்கு மேற்பட்ட கடவுள் என்ற பொருளில் வழங்கு கிறது. இவ்வுருவம் கடவுள் என்பதைக் காட்டவே கொம்பு காட்டப் பட்டது எனலாம். கொம்பு வலிமையின் அறிகுறியாகும். கோதவர்

22. K. N. Sastri Vol I p 75.
23. சிவஞான போதம் முதல் நூற்பா.
கைவல்யம் ஆரோப இலக்கணம்;

நடு மாநிலம், ஒரிசா போன்ற மலைப்பகுதிகளில் வாழும் கொண்டர்கரும், கோயிகரும் இன்றும் நடமாடும்போது தலைப்பாகையில் எருமைக் கொம்புகளைச் செருகி வைத்துக் கொண்டு ஆடுகின்றனர்.[24] ஒற்றைக் கொம்புடைய எருதுகள் இதேபோன்று வணக்கத்துக்குரியவை'' என்பதை நாமறிவோம்.

6. உருத்திரன் அன்று: ஆரிய மறைகளில் உருத்திரன் வில்லையும் அம்பையும வைத்திருப்பவராகக் குறிப்பிடப்படுகிறார்.[25] சிந்துவெளி முத்திரைகள் பலவற்றில் வில் இடம் பெற்றுள்ளது. இஃது உருத்திரனாக இருந்தால் வில் கையில் கொடுக்கப்பட்டிருக்கும். நான்முகனைப் பொருத்தவரை பிராமணங்களில்தான் கூறப்படுகின்றதே இன்றி, வேதத்தில் மிகுதியும் இல்லை.[26] வேதத்தில் (RV X 121) ஒரு பாட்டில்தான் நான்முகன் உறிரண்ய கற்பர் முதற் கடவுள் என்று குறிப்பிடப்படுகிறார்.[26] சதபாத பிராமணத்தின் (X, I, 3, I) நான்முகனின் (பிரசாபதியின்) படைப்பு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.[28] வேதம் பிராமணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகட்கு ஏற்ப ஏதும் இவ்வுருவத்தில் இல்லை என்பதை நாம் உணர முடியும.

7. இம்முத்திரையின் முகத்தை உற்று நோக்கிவிட்டு, சிந்துவெளி முத்திரைகளிற் கண்டுள்ள எருதுகளின் உருவததையும ஒப்பு நோக்கினால் இத் தலை மாந்த வுருவே எனபது நன்கு புலனாகிறது. மூக்கு கண் முதலியன விலங்குகட்கு இவ்வாறிருக்காது. அனறியும முததிரைகளில் காணபபடும மாநத வுருவங்கள் யாவும இவ்வாறுதாம் அமைந்துள்ளன எனபதுவுட தெளிவு.

8. ஏழு கன்னியர்: வேதத்தில் இந்திரனுக்கு ஏழு கணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவாகள் பறவை போன்று பறக்கும் இயல்புடையவர்கள். முததிரை 430-இல் ஒரு செடிக்கு நடுவில் ஒருருவம் நிற்கக் கீழே ஏழு உருவங்கள் நிற்கின்றன. இவ்வேழும் இக் கணங்கள் என்கின்றார் ஆசிரியர்.[29] இவ்வெழுவரும் கணங்கள் என்றும் செடிக்கு

24. Thurston's castes & Tribes of South India Vol IV p 61.
25, I. Murdoch An account of the Vedas p 47
26 Rigveda X 121. 27. J Murdoch p 47
2S. Satapatha Bramana X, I, 3, I
29. K. N. Sastri New light on the Indus civilization Vol I p.

நடுவில் நிற்கும் தெய்வம் அரசமரக் கடவுள் என்றும் குறிப்பிடுகிறார்.[30] இக்கணங்களின் எண்ணிக்கை ஓரிடத்தில் நூற்றென்பது என்றும், ஓரிடத்தில் இருபத்தேழு என்றும் நூல்களில் குறிப்பிடப்படுகிறது.[31] இக்கணங்களுக்கும் இச்செடித் தெய்வம் அல்லது தரைத் தெய்வத்துக்கும் என்ன தொடர்பென்பதை அவர் காட்டவில்லை. இன்றும் தமிழகத்தில் பொங்கலை அடுத்த நாளில் மரத்தடியில் கல் நட்டு ஏழு கன்னியர் வழிபாடு செய்வது வழக்கம். சிற்றூர்ப் புறங்களில் கன்னியர் கோவில்கள் உண்டு. நிலமகள் வழிபாடே இக்கன்னி வழிபாடு, மற்றும் பத்தினி வழிபாட்டுக்கு வழிகோலின என்று கருத வாய்ப்புண்டு, இங்கும் திரு· சாத்திரி அவர்களின் கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாகஇல்லை. கணங்கள் என்று நிலைநாட்டுவதற்காக அவர் பெண்களின் சடைப்புறத்தை மரக்கிளைகள் என்றும் மரக்கிளைகளை ஆண்களும் அணிவதுண்டு என்றும் கூறுகிறார். ஏறக்குறைய ஒன்றே கால் விரற்கடை சதுரமுள்ள முத்திரையில் உடை பற்றி ஒன்றும் கூற வழியில்லை. இந்த ஏழு உருவங்களும் கந்தர்வர், கின்னரர், யக்சர் போன்றவர்[32] என்று அவர் கூறுவது சரியாகப்படவில்லை.

9. காவல்மரம்: திரு. சாத்திரி அவர்கள் மரத்தொடர்புள்ள பல செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறார். அவற்றை எண்ணும் போது தமிழ் மறவர் காவல்மரம் காத்த இலக்கியச் செய்திகளோடு அவை ஒத்துள்ளன [33]

10. கண்ணனே: முத்திரை ஒன்றில் ஓர் உருவம் உட்கார்ந்திருப்பது போலவும் அதன் இருபுறங்களிலும் வரிசையாக மக்கள் நின்று வணங்குவது போலவும் பொறிக்கப்பட்டுள்ளன. பத்தர்கள் தலைகளில் பாம்பு காணப்படுகிறது. இம்முத்திரையில் உள்ள காட்சி சாஞ்சி, பர்கத் முதலிய இடங்களில் உள்ள புத்தர் பெருமானை நாகவழி அரசர்கள் வணங்குதல் போல வரையப்பட்டுள்ள ஓவியங்களை நினைப்பூட்டுகிறது என திரு. கே. என். தீக்சித் கூறுவார்.[34] கண்ணபிரான் கலியன் என்ற நாக மன்னனை வென்

30. K. N. Sastri; 31. J. Mxrdoch
32. 33. K. N. Sastri p 11.
34. K. N Dikshit. Pre Historic civilization of the Indus Valley p 35

பகைவரையும் பிணிக்கும் பாவேந்தர்

-புலவர். சுந்தர சண்முகனுர், புதுவை.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்று சொல்வன்மைக்குச் சிறப்பிலக்கணம் கூறியுள்ளார் திருவள்ளுவனுர். பாவேந்தர் பாரதிதாசனே பகைவரையும் பிணிக்கும் பாவன்மையுடையவராய்த் திகழ்ந்தார். இதற்கு எனது பட்டறிவிலிருந்து ஒரு காட்டு தருவேன்:

1942-ஆம் ஆண்டு புதுச்சேரியைச் சார்ந்துள்ள உப்பளம் என்னும் பகுதியில் பாவேந்தர் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நான் சொற்பொழிவாற்றினேன். அவரை அப்பொழுதுதான் நான் முதல்முதலாகப் பார்த்தேன். அன்று நான் முறுகிய கடவுள்பற்று உடையவனுயிருந்தேன். பாவேந்தரோ அத்தகைய பற்று இல்லாதவராய்க் காணப்பட்டார். இந்த நிலையில் அவர் தமது தலைமை முடிவுரை

(முன்பக்கத் தொடர்ச்சி)

றவுடன் அவனும் அவனைச் சேர்ந்தவரும் கண்ணனை வழிபடும் காட்சியே இம்முத்திரையிற் காணப்படுவது என திரு. மித்திரா அவர்கள் கூறுவார்.[35] முல்லை நில மக்கள் மாயோனைத் தெய்வமாக வழிபட்டதைத் தொல்காப்பியம் கூறும்.[36] பாரத காலக் கிருட்டிணனுக்கு முன்பே வேத காலத்தில் யமுனைக்கரையில் ஆரியரை எதிர்த்த கிருட்டிணன் (கருப்பன்) ஒருவன் இருந்தான். கிருட்டினனுக்குப் பகைவன் இந்திரன். இக் கிருட்டிணன் ஆரியக் கடவுளல்லன். அவன் வேதமொழிகளில் வெறுப்புக் கொண்டான். "வேதத்தின் மலர்ந்த சொற்களுக்கு இடம் கொடாதே" என்று கிருட்டிணன் கீதையில் எச்சரிக்கிருன். இவற்றை நோக்கின் இவ்வோவியம் கண்ணனதாக விருக்கலாம் என்று கருத இடமுள்ளது.[37]

(தொடரும்)

35. P. Mitra. pre Historic India p 275
36. தொல், பொருள்.
37. P. T. Srinivasa Aiyangar. Stone age of India p 49-51

யில் என்னைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எழுந்து மறுத்துப் பேசவேண்டும் என்று எண்ணினேன். அது நாகரிகமன்றெனக்கருதி எப்படியோபொறுத்துக் கொண்டேன். கூட்டம் முடிந்ததுமே அவ்விடத்தை விட்டகன்று விட்டேன்.

கருத்து வேற்றுமைக்காக ஒருவர்மேல் கசப்போ வெறுப்போ பகையுணர்வோ கொள்ளலாகாது. என்ற கருத்து எனக்கு அப்போது-அஃதாவது இருபதாவது அகவையில் (வயதில்) தெரியாமற்போயிற்று. பாவேந்தர்பால் யான் பகையுணர்வு கொண்டிருந்தேன்.

இந்த நிகழ்ச்சி நடந்தது கோடை விடுமுறையிலாகும். அப்போது நான் மயிலம் தமிழ்க் கல்லூரியில் ஒரு விரிவுரையாளனாக வேலைபார்த்துக்கொண்டிருந்தேன். விடுமுறைக்குப்பின் கல்லூரி தொடங்கப்பெற்றது. கல்லூரி மாணாக்கர்கள் நாடோறும் காலையில் பொது அரங்கில் கூடி இறைவணக்கப் பாடல் ஒன்றும் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் ஒன்றும் முறையே முழுவதாகப் பாடிய பின்னரே வகுப்புகளுக்குச் செல்வது வழக்கம். நாடோறும் இதனை மேற்பார்வை யிடுவது எனது பொறுப்பில் விடப்பட்டிருந்தது

இன்னின்ன இறைவணக்கப் பாடல்களையும் இன்னின்னார் இயற்றியுள்ள தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்களையும் பாடலாம் என நான் மாணாக்கர்க்கு அறிவுறித்தி யிருந்தேன். 'பாரதிதாசன் இயற்றியுள்ள தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்களையும் பாடலாமல்லவா?' என்று மாணாக்கர்கள் என்னை வினவினர். அதைக் கேட்டதுங் கடுஞ்சினங் கொண்ட நான், 'அந்த ஆள் பாடலை இங்கே எப்பொழுதும் பாடவே கூடாது' என்று கடுமையாகக் கட்டளை யிட்டு விட்டேன். மாணவர்கள் வாய் பொத்திக்கொண்டனர்.

தமிழறிஞர் பலரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்கள் நாடோறும் மாறி மாறிப் பாடப்பட்டுவந்தன. ஒவ்வொரு பாடலின் ஆசிரியர் பெயரும் எனக்கு நன்றாகத் தெரியும். ஒருநாள் பாடப்பெற்ற தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை நான் மிகவும் மெய்ப்மறந்து கேட்டுக்கொண்டிருந்தேன. இதற்குமுன் அப்பாடலைக் கேட்டதேயில்லை; அதன் ஆசிரியர் பெயரும் எனக்குத் தெரியாது. என்னை இறுகப்பிணைத்துத் தன்பால் ஈர்த்துக்கொண்ட அப்பாடலின் ஆசிரியர் பெயரை அறிந்து கொள்ளத் துடியாய்த் துடித்தேன். பாட்டு முடிந்ததும் பாடிய மாணவனை யழைத்து ஆசிரியர் பெயரை வினவினேன். அவர் தயங்கினார். 'சொல்-சொல்' என்று விரைவு படுத்தினேன். 'ஆசிரியர் பெயர் தெரி

யாது; ஒருவர் பாடக்கேட்டு அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன்' என்று ஏதேதோ குளறினர். நான்விடவில்லை; 'நீ மறைக்கிறாய் சொல்லித்தான் ஆகவேண்டும்' என்று கட்டாயப்படுத்தினேன். 'சொன்னால் நீங்கள் சினம் கொள்வீர்கள் என்று அஞ்சுகிறேன்' என்றார் அவர். 'அப்படியொன்றுமில்லை, அஞ்சாது கூறுக' என்றேன். 'அந்தப் பாடலின் ஆசிரியர் பாரதிதாசன்' என்றார் அவர். உடனே எனக்குப் பாரதாசன்மேலிருந்த பகையுணர்வு அடியோடழிந்தது; ப்ற்றும் பரிவும் ஓங்கியெழுந்தன. எனது நா அவரைப் பாராட்டியது. வாழ்த்தியது. அவரது பாடலை அறவே பாடக்கூடாது என ஆணையிட்டிருந்த நான், அவர் பாடலை அடிக்கடிப் பாடவேண்டுமென வேண்டிக் கேட்டுக் கொண்டேன். அவர்பால் பகையுணர்வு கொண்டிருந்த என்னை இறுகப் பிணித்துத் தன்பால் ஈர்த்துக்கொண்ட அப்பாடல்

''வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரரின் வீரமும் வெற்றியும் நீயே

—என்று தொடரும் பாடல்.

இந்தப் பாடலை மிகவும் உருக்கமாகவும் இனிமையாகவும் பாடக் கேட்டதும் பாவேந்தர் பாலிருந்த பகையுணர்வைப் பற்றும் பரிவுமாய் மாற்றிக்கொண்ட நான், பின்னர்ப் பாவேந்தருடன் தொடர்ந்து பல்லாண்டுகள் தொண்டனுக்குத் தொண்டனாய்ப் பழகியுள்ளேன். அதே உப்பளத்தில் அவர் தலைமையில் சொற்பொழிவாற்றியுள்ளேன்; என் நூலுக்கு அவரிடமிருந்து சிறந்த மதிப்புரை பெற்றுள்ளேன்; அவர் நூற்கட்கு அச்சுப்பிழை (Proof) திருத்தியுள்ளேன்; அவரது 'காதலா? கடமையா? என்னும் நூலுக்கு, அவர் ஆணைப்படி கதைச் சுருக்கம் எழுதித் தந்துள்ளேன்; அவருடன் பல ஊர்கட்குச் சென்று வந்துள்ளேன்; அவருடனே-அவர் வீட்டிலே மணிக்கணக்கில் தங்கி வந்துள்ளேன்; பலவகையிலும் அவரது பேரன்பைப் பெற்றுள்ளேன். ஆப்! பகைவரையும் பிணிக்கும் பாவேந்தரின் புகழ் நீடுழி வாழி!

பாவேந்தர் நன்றிக்கடன்-பெயர்ப்பட்டியல்.

தவிர்க்கவியலாத காரணங்களால் பாவேந்தர் நன்றிக்கடன் கொடைப்பட்டியல் இந்த இதழிலும் வெளியிடப்பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும். —அமைச்சர்.

வெற்றிநாள். அதுவரை தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் தொடர்ந்து வரவேண்டும்.

இறுதியாக, 'தென்மொழி' ஒன்றினாலேயே தமிழனின் தன்மான உணர்வும், மொழியும், நாடும் காக்கப்படும் என்று உறுதியாக நம்புகின்றேன். தென்மொழியாலும் மேற்கூறியவை, காக்கப்படாமற் போயின் பண்டைத்தமிழகத்தையும், ஆயிரக்கணக்கான தனித்தமிழ் நூல்களையும் விழுங்கிய குமரிமாக்கடல் எஞ்சியுள்ள தமிழனையும் விழுங்கிவிட்டுப் போகட்டும்!

—த. செகந்நாதன், வான்படை, இராம்பூரத்.

0 ஓங்குக உங்களின் அயராத் தமிழ்ப்பணி! தமிழன்னையும், தமிழ்ப் பிறப்புகளும் என்றும் உங்கள்பால் நின்று உதவுவார்கள். இன்னும் முழு ஊக்கத்துடன் செயல்படுங்கள்.

உங்களுக்கு ஆக்கத் துணையாகத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இவற்றைப் பரப்புவதற்கு முயன்றுகொண்டுள்ளோம். ஊக்கம் என்றும் தளராது தலைநிமிர்ந்து செயல்படுங்கள். ஒரு பெரிய குமுகாயமே உங்கள் பின்பு நடைபோடுகின்றது என்பதை நினைவு படுத்துகின்றேன். —தங்கவேலன, வான்படை நிலையம் சாம்நகரம்.

0 (திருச்சி அன்பர்கள் கவனிக்க)

திருச்சி மாநகரிலுள்ள தென்மொழி அன்பர்களாகிய நாம், சிதறிப் பல்வேறு இடங்களில் இருக்கின்றோம். தென்மொழி வளர, தொன்மொழியாம் தனித்தமிழ் வளர ஆவன செய்யவேண்டியவை ஏராளம். தூங்கிக்கிடந்த பல்வேறு தனித்தமிழ் நெஞ்சங்களைத்தட்டி எழுப்பிய "தென்மொழி"யின் துணையுடன் தனித்தமிழ் இயக்கம் வளர' ஆவன செய்வோம். ஆதலின் இந்நகரிலுள்ள தென்மொழி அன்பர்கள் இணைந்து இயங்க "தென்மொழி அன்பர் இயக்கம்" விரைவில்தொடங்கப்பட இருக்கின்றது. இவ்வியக்கம்பல்வேறுதுறைகளில் இறங்கித் தனித்தமிழ் இயக்கம் வளர இயங்கும். பாவாணர், துரை—மா (பெருஞ்சித்திரன்) தமிழ்த்தொண்டினை உலகத்திற்கு உணர்த்த இயங்க விருக்கின்றது. அவர்கள் எழுதிய நூற்களைவெளியிடவும் "கலைச்சொல் அகரமுதலி" ஒன்றை அவர்களின் உதவியுடன். வெளியிடவும் பிற நற்பணிகளை ஆற்றவும் இயங்கும்! தனித்தமிழ் மாநாடு தமிழகத்தின் நடுவே அமைந்துள்ள இந்நகரில் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தவும் முயலும். எனவே இதனைக் கண்ணுறும் அன்பர்கள் தங்கள் தங்கள் முகவரிகளை, மே/பா. வசந்தவல்லி நூலகம் தலைவாசல் *(Main guard gate)* திருச்சி-2. என்ற முகவரியில் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.-த. கங்காதரன், திருச்சி—1

0 தமிழர்களால் நடத்தப்பெறும் முரசொலி, காஞ்சி, முத்தாரம், சமநீதி, தினத்தந்தி. மாலைமுரசு, மாலைமணி, இராணி முதலான தாளிகைகள்கூட திருவள்ளுவர் தொடர் ஆண்டினைத்தொடவும் அஞ்சுகின்றன என்றால் என் செய்வது? திருவள்ளுவரது 2000-ஆவது ஆண்டு விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடவிருக்கும் இவ்வேளையிலாவது, வள்ளுவர் தொடர் ஆண்டினைப் பயன்படுத்த மேற்கண்ட தாளிகைகள் முன்வருதல் வேண்டும். இல்லையெனின் பாவேந்தர் ஊட்டிய உணர்வு கிளர்ந்து எழுகின்ற வேளை மிகு தொலைவில் இல்லை என எடுத்தியம்ப விழைகின்றேன். தனித்தமிழ்ப் பணியாற்றும், தகைமைசால் தமிழ்த்தொண்டரான தாங்கள், தமிழகத்தாளிகைகள் திருவள்ளுவர் தொடர் ஆண்டினைக் கைக்கொள்ள ஆசிரியவுரையில் எடுத்துக்காட்டி இடித்துக் கூறுமாறு வேண்டுகின்றேன்.

கா. சுப்பராயன், வீசாணம் அஞ்சல், நாமக்கல் வட்டம்.

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

துரை-மாணிக்கம்

எழுதிய

தேவைக்கு முந்துக!

தனிப்படி உருபா, 1—00

அஞ்சல்வழி வேண்டுவோர் உருபா. 1-25 விடுக்க.

விளக்கங்களுக்கு,

தென்மொழி

கடலூர்-௧